# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 1 ஞாயிற்றுக்கிழமை (16-07-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:163

## அரசு-புலிகள் விரைவில் ஒஸ்லோவில் பேச்சு?

விடுதலைப்புலிகளுக்கும் அரசுத் தரப்புக்குமிடையில் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் மிகவிரைவில் நேரடிப் பேச்சுக்கள் நடைபெறவிருப்பதாக தெரியவருகின்றது என்று கொழும்பில் இருந்து வெளியாகும் தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் பேச்சுக்களில் புலிகள் தரப்பில் அதன் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் -

அரசுத்தரப்பில் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உட்பட இரு அமைச்சர்களும் -

பங்குபற்றுவர் என்றும் - அச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோயிலில் மோதல்

நாகர்கோயில் பகுதியில் நேற்று முன்தினம் ரோந்து சென்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் இடம்பெற்றதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. இந்த மோதலில் விடுதலைப் புலிகள் எட்டுப்பேர் கொல்லப்பட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரிப் பகுதியில் புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### 123 வருடங்களுக்குப் பின்

## அரிதான சந்திர கிரகணம் இன்றிரவு நிகழ்கிறது!

யாழ்ப்பாணம்,ஜூலை16

ஆடிப்பிறப்பு தினமான இன்று பூரண சந்திரகிரணம் நிகழ உள்ளது. அதனை இலங்கை மக்களும் காணக்கூடியதாக இருக்கும் என கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சந்திர ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

பௌர்ணமி தினமான இன்று இரவு 7.02மணி முதல் ஒருமணித்தியாலம் 47 விநாடிகளுக்கு சந்திரன் செந்நிறமாகக் காட்சியளிக்கும் என உலக வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# இ.தொ.கா. உட்பட 8 தமிழ்க் கட்சிகள்

# தீர்வுத் திட்டத்தை அடியோடு நிராகரிப்பு!

# புலிகளுடன் பேசக் கோரிக்கை

கொழும்பு,ஜூலை16

**இனப்பிரச்சினைக்குத் தீர்வாக பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சியுடன் இணக்கம் கண்டு, அரசு முன்வைத்திருக்கும் தீர்வுத் திட்ட யோசனைகளை அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் மற்றும் நான்கு மலையகக் க்ட்சிகளும் ரெலோ, ஈ.பி. ஆர்.எல்.எவ்., அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியனவும் அடியோடு நிராகரித்துவிட்டன.**

**தீர்வுத் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான முதல் நடவடிக்கையாக, போரை நிறுத்தி புலிகளுடன் அது குறித்துப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்றும் இக்கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.**

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், எம்.எஸ். செல்லச்சாமியின் இலங்கைத் தேசியத் தொழிலாளர் காங்கிரஸ், பி.சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி, ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் (அஸீஸ் பிரிவு), ரெலோ, ஈ.பி.ஆர். எல்.எவ்., அகில இலங்கைத் தமிழ்க்

(12ஆம் பக்கம் பார்க்க)

### தலையாழி சூட்டுச் சம்பவம்:

## பிரேத பரிசோதனையின் பின் மாணவனின் சடலம் ஒப்படைப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை16

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் யாழ்.ஆஸ்பத்திரியில் கடந்த வியாழன் இரவு பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்ட யாழ்.இந்துக் கல்லூரி உயர் வகுப்புக் கணிதப் பிரிவு மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் (வயது18) சடலம் நேற்று மாலை பிரேதபரிசோதனையின் பின்னர் அவரது தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த மாணவன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் யாழ்.கல்விச் சமூகத்தைப் பெரிதும் உலுப்பியுள்ளது.

இப்படுகொலையைக் கண்டித்து நேற்று குடாநாட்டில் தனியார் ரியூட்டரிகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. அவை இன்றும் இயங்கா என்று நேற்றே அங்கு அறிவிக்கப்பட்டது.

இப்படுகொலைச் சம்பவம் குறித்து யாழ்.நகரில் இயங்கும் பல்வேறு சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் தமது சுயாதீன விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

சர்வதேசத் தொண்டு நிறுவனம் ஒன்று தனது பிரதிநிதிகளை சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் தலையாழிப் பகுதிக்கு நேற்று அனுப்பி சுயாதீன விசாரணைகளை நடத்தியதையும் அவதானிக்க முடிந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் தேடுதல்

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று சுற்றிவளைப்புத் தேடுதல் இடம்பெற்றது. ஓடைக்கரைப் பகுதி, கல்லூரி வீதி, விநாயக முதலியார் வீதி ஆகிய இடங்களை உள்ளடக்கி காலை 6 மணி முதல் நண்பகல் வரை தேடுதல் நடத்தப்பட்டது. (ஐ-15)

## தலையாழிப் பகுதிக்குச் சென்ற மற்றும் இருவரைக் காணவில்லை!

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் சோ.சஞ்சீவன் படுகொலையுண்ட கொக்குவில் தலையாழிப் பகுதிக்கு அச்சம்பவம் நடைபெற்ற அதேசமயம் சென்றதாகக் கூறப்படும் மேலும் இரண்டு பொதுமக்களும் அதற்குப் பின்னர் காணாமற்போயிருக்கின்றனர்.

பனை, தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாமம் கொத்தணித் தலைவர் நா.கணேசன், அதன் பதில் பொதுமுகாமையாளர் க.சுதர்சன் ஆகியோரே காணாமற் போயிருக்கின்றார்கள்.

தமது சங்கத்துக்கு நிலுவையாக வரவேண்டியுள்ள கடனை அறவிடுவதற்காக தலையாழிக்கு அருகில் கலட்டிப் பகுதியிலுள்ள மதுபான விற்பனை நிலையத்துக்கு கடந்த வியாழக்கிழமை மாலை தமது அலுவலகத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற இவர்கள், அதன்பின்னர் காணாமற்போயுள்ளார்கள்.

சஞ்சீவன் படுகொலையுண்ட சமயம் இவர்களும் கைதாகியிருக்கலாம் அல்லது இவர்களுக்கும்-

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் 2 பிரதிநிதிகள் கொழும்பில்

கொழும்பு,ஜூலை16

இனப்பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர்.

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களான றிச்சர்ட் கேவிட், றொபர்ட் கீவன் ஆகியோரே வருகை தந்துள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் தொடர்பு ஊடாகவே இவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் கொழும்பில் தங்கியிருக்கும்போது இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஆராயவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

## ஒகஸ்ட் 16 அரசுக்கு சுபநாள்; அன்று நாடாளுமன்றம் கலைப்பு?

கொழும்பு,ஜூலை16

ஜோசியர்களின் கருத்துப்படி ஒகஸ்ட் 16 ஆம் திகதி அரசுக்கு நல்ல நாள் என்பதால் அன்றைய தினம் நாடாளுமன்றைக் கலைத்து புதிய தேர்தலுக்கான உத்தரவை அரசு வெளியிடும் என்று தெரியவருவதாக கொழும்பு சிங்கள நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில் -

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு முன்வைத்துள்ள யோசனைகளை சட்ட வரைவாக்கும் பணி எதிர்வரும் வெள்ளிக்கிழமை முடிவடையும் என்றும் -

ஒகஸ்ட் மாத ஆரம்பத்தில் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் -

ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக அமைச்சர் பட்டி வீரக்கோன் நேற்று தகவல் வெளியிட்டார்.

(உ-4-164)

## அரச அதிபர்களை ஜனாதிபதி சந்திக்கிறார்

கொழும்பு,ஜூலை16

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் கடமையாற்றும் அரசாங்க நிர்வாக சேவை உத்தியோகத்தர்களை ஜனாதிபதி சந்திரிகா இன்று சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெறவுள்ள இந்த சந்திப்பில் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரசாங்க அதிபர்கள் அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்காக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரி.ஜயாத்துரை, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் எஸ்.சுந்தரம், மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.சண்முகநாதன் ஆகியோர் கொழும்பு சென்றுள்ளனர்.

அரசாங்க நிர்வாக சேவை உத்தியோகத்தர்களை சந்திக்க உள்ள ஜனாதிபதி அரச நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக அவர்களிடம் கேட்டறியவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## யாழ். வாக்காளர் பட்டியல் தேர்தல் திணைக்களத்துக்கு!

கொழும்பு,ஜூலை16

யாழ். மாவட்டத்தின் தேர்தல் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு தேர்தல் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.சண்முகநாதன் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

மோதல் காரணமாக பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளிலும் தங்கியுள்ளமையினால் வீடுவீடாகச் சென்று வாக்காளர் விண்ணப்பங்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையர் உட்பட பலருடன் துருக்கிக் கப்பல் சிக்கியது!

கொழும்பு,ஜூலை16

இலங்கையர் உட்பட 190 சட்டவிரோதக் குடியேற்றக்காரருடன் கிரேக்கத் துறைமுகம் ஒன்றுக்குள் நுழைந்த துருக்கி நாட்டுக் கப்பல் ஒன்றை கிரேக்க கரையோரக் காவல்படை நேற்று சுற்றிவளைத்துப் பிடித்தது.

இலங்கையர் தவிர ஈரான், சியாராலியோன், ஆப்கான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் இக்கப்பலில் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

அவர்களில் 18 பேர் பெண்கள், 22 பேர் குழந்தைகள். நோயுற்ற நிலையிலிருந்த 11 பேர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், ஏனையோர் மேல் விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# புலி உறுப்பினர் எனக் கைதான வவுனியா ஆசிரியர் விடுதலை

## நஷ்டஈடு ரூ.75 ஆயிரம் வழங்கத் தீர்ப்பு

கொழும்பு,ஜூலை16

விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர் எனத் தெரிவித்து கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆசிரியர் ஒருவரை விடுதலை செய்யுமாறும் அவருக்கு நஷ்டஈடாக 75 ஆயிரம் ரூபா வழங்கும்படியும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த ஆசிரியரான தர்மலிங்கம் நிமலன் என்பவர் கடந்த வருடம் மே மாதம் 28ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

விடுதலைப்புலிகள் உறுப்பினர் எனத் தெரிவித்து அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவரை விடுதலை செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரணை செய்து வந்த உயர்நீதிமன்ற நீதியரசர்களான வீரரத்ன, அமீர் இஸ்மாயில், வீரசேகர ஆகியோர் தமது தீர்ப்பை நேற்றுமுன்தினம் வழங்கினர்.

பிரஸ்தாப ஆசிரியரை விடுதலை செய்த நீதிமன்றம் இவர் கைது செய்யப்பட்டபின் 32 காயங்கள் ஏற்பட்டுள்ளன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதால் அவருக்கு 75 ஆயிரம் ரூபாவை நஷ்டஈடாக வழங்கும்படி தனது தீர்ப்பில் தெரிவித்தது.

(உ-3)

# நிபந்தனையற்ற பேச்சு புலிகளுடன் தேவைதானா?

## சீறுகிறது வீரவிதான

கொழும்பு,ஜூலை16

வடக்கில் முப்படையினரும் உறுதியாகப் போராடும் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசமைப்பைத் திருத்துவதோ நிபந்தனையற்ற முறையில் புலிகளுடன் பேசுவதோ உகந்ததல்ல. அதனை விட்டு படைகளைப் பலப்படுத்த அரசு முன்வரவேண்டும்.

- இப்படிக் கோரிக்கை விடுத்துள்ளது வீரவிதான அமைப்பு.

அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

திருகோணமலை மாவட்டத்தில் வெல்கம் விகாரை முகாம் மீதும், விகாரைமீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் விகாராதிபதி காயம் அடைந்துள்ளார். பல பொதுமக்கள் காயம் அடைந்துள்ளனர்.

சிங்களத் தலைவர்களையும், சிங்கள மக்களையும் அழிப்பதே அவர்களின் நோக்கம். இந்தத் தாக்குதலும் அதையே வெளிக்காட்டுகின்றது.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு என்று கீழ்மட்டத்துக்கு அரசு போய் விட்டது - என்றுள்ளது.

(உ-3)

# சனத்தொகைக் கணக்கெடுப்பு அடுத்த ஆண்டு மார்ச்சில்

கொழும்பு,ஜூலை16

இலங்கையில் நீண்ட காலமாக நடத்தப்படாமல் இருந்த சனத்தொகை கணிப்பீட்டை அடுத்த வருடம் மார்ச் மாதம் மேற்கொள்வதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் நிலைமை காரணமாக இத்தகைய சனத்தொகை கணிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை என்று புள்ளி விவரத் தொகை மதிப்புத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சி.ஈ. டபிள்யு. நாணயக்கார தெரிவித்தார்.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்படவுள்ள இந்தச் சனத் தொகை கணிப்பீட்டுக்கு 42 கோடி ரூபா செலவிடப்படும் என்றும் -

ஒருலட்சம் அதிகாரிகள் இந்தப் பணியில் ஈடுபடுவார்கள் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. சனத்தொகை கணிப்பீடு 10 வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ-9)


## தொடர்பு கொள்ளவும்

பேயாடிக்குளம், வவுனியா எனும் முகவரியைச் சேர்ந்த **அப்புத்துரை சிவகுமார்** *(சின்னத்தம்பி) (தேசிய அ.அட்டை இல:563591730V)* என்பவரை யாழ்.ரெலிக்கொம் அலுவலகத்தில் வந்து சந்திக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

***மேக்கன்ரைல் பாதுகாப்பு சேவை***

(76431)



## தொண்டர் ஆசிரியர்களின் கவனத்துக்கு

தொண்டர் ஆசிரியர் சங்கத்தில் பதிவினை - மேற்கொண்டு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோர் **நாளை(17.07.2000) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு D.M.I கல்வி நிலையத்துக்கு** சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தலைவர்,**
**தொண்டர் ஆசிரியர் சங்கம்,**
**யாழ்.மாவட்டம்.**

(76434)



## வெளிவாரிப் பட்டப்படிப்பு

**B.A. பேராதனை**

**விரிவுரைகள் இன்று 16.07.2000 ஆரம்பமாகின்றன**

**GAQ 2001**

**சமூக உளவியல்**

**ஆரம்பம்: இன்று (16.07.2000) 11 மணிக்கு**

***பட்டப்படிப்புகள் கல்லூரி***

*57/13 ஸ்ரான்லி வீதி, (இலங்கை வங்கி முன்பாக)*
*யாழ்ப்பாணம்.*

(76433)


## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை16

அராலி மத்திய ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு விழா இன்று நண்பகல் 12 மணி முதல் கழகத்தின் தலைவர் த.கிருபாகரன் தலைமையில் அராலியில் நடைபெறும்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என்.திரிலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ)

## இலவச பாடநூல் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

மூன்றாவது தொகுதி இலவச பாடநூல்கள் நேற்று யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டு, யாழ்.மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வலயக் கல்விப் பணிமனைகள் தமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தத்தம் வலயங்களுக்குரிய பாட நூல்களை உடனடியாகப் பொறுப்பேற்று, எடுத்துச் செல்லலாம் என மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை தெரிவித்துள்ளார். (உ)

## ஐஸ்கட்டி உற்பத்தி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் ஐஸ்கட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் ஐஸ் உற்பத்தி வேலைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன.

பொதுமக்கள் தமக்குத் தேவையான ஐஸ்கட்டிகளை இன்று முதல் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட மின் தடை காரணமாக இங்கு ஐஸ் உற்பத்திகள் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## நீர் விநியோகம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

சேதமடைந்த நீர் விநியோகக் குழாய்களின் திருத்த வேலைகள் பூர்த்தியடைந்ததைத் தொடர்ந்து யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள தண்ணீர்த் தாங்கி ஊடா குடி தண்ணீர் விநியோகம் இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதாக யாழ்.மாநகர சபை நீர் வேலைப் பொறியியலாளர் க.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்தத் தாங்கி ஊடாக ஏற்கனவே நீர் வழங்கல் மேற்கொள்ளப்பட்டு வந்த சகல பகுதிகளுக்கும் தினமும் காலை 8 மணி தொடக்கம் 8.45 மணி வரை குடி தண்ணீர் பாவனைக்காகத் திறந்து விடப்படும் என்றும் -

குடி தண்ணீரை வீண் விரயம் செய்யவோ வேறு தேவைகளுக்குப் பாவிக்கவோ வேண்டாம் என்றும்-

அவர் பொதுமக்களைக் கேட்டுள்ளார். (ஐ-9)

## 2ஆம் தவணைப் பரீட்சை

குருநகர்,ஜூலை16

யாழ்.கல்வி வலயத்தினுள் இயங்கும் பாடசாலைகளில் 2ஆம் தவணைப் பரீட்சைகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாகின்றன. (ஐ-51)

## நூலகம் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை16

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் சிறுவர்களுக்கான நூல்நிலையமொன்று பாடசாலைக் கட்டடத்தில் நாளை திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த வைபவத்தில் மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் கலந்து கொள்வர். (ஐ-4)

## குருநகர் குடும்பங்கள் வருகை

குருநகர்,ஜூலை16

குருநகரில் குடும்பத்துடன் தங்கியிருப்பவர்கள் மட்டுமே குடாக் கடலில் மீன் பிடிக்க அனுமதிக்கப்படுவார்கள் எனப் படையினர் மீனவர்களுக்கு அறிவித்துள்ளதனால் குருநகரில் இருந்து இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருந்த குடும்பங்களில் சில மீண்டும் குருநகர் திரும்புகின்றன.

(ஐ-51)

# கொலைப்பயமுறுத்தல் விடுத்தவர் தமிழ்க்கட்சி ஒன்றின் எம்.பியாம்!

## விநாயகமூர்த்தி கூறுகின்றார்

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி தமக்கு தொலைபேசி மூலம் கொலைப் பயமுறுத்தல் விடுத்தவர் தமிழ் இயக்கம் ஒன்றைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரே என்று சர்வதேச மன்னிப்புச் சபைக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டை அடுத்து அவருடன் தொடர்பு கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய நாடுகளுக்கான பொறுப்பதிகாரி இங்ரம் மஸாஜி விவரங்களைக் கேட்டறிந்தார்.

சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினருடன் தொடர்பு கொ[illegible] மன்னிப்புச் சபையின் பொ[illegible]திகாரி நடவடிக்கை எடுத்து[illegible]ார்.

அதேசமயம் - அப்பாத்துரை விநாயகமூர்த்தி நாரஹேன்பிட்டி பொலீஸிலும் இதுகுறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

பிரஸ்தாப அரசியல்வாதி தொடர்பான தகவலைத் தருமாறு அவரிடம் பொலீஸார் கேட்டுள்ளனர்.

"நான் விவரம் தந்தாலும் நீங்கள் அவரைக் கைது செய்யமாட்டீர்களே" என்று அவர் பதில் அளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# போதைப்பொருள் கடத்தியவர் கட்டுநாயக்காவில் கைது

இந்தியாவில் இருந்து ஆறு கிலோ நிறையுடைய போதைப் பொருள்களை இலங்கைக்குள் கடத்த முயன்றதாகக் கூறப்படும் நபர் ஒருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துச் சுங்க அதிகாரிகள் கைது செய்தனர்.

43வயதுடைய இலங்கையரான இவர் எடுத்துவந்த போதைப் பொருள்களின் பெறுமதி 93 லட்சம் ரூபா என்றும் -

மேலதிக விசாரணைகளுக்காக இவர் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

(இ-9)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் கடமையாற்றும்
**திரு.க.சோமசுந்தரம்** அவர்களின் அன்பு மகன்

**செல்வன் சோ.சஞ்சீவன்**

அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவருக்கு ஆறுதல் கூறுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*இல.30 கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (76429)

**ஊழியர்கள்,**
***கணன் பான்சி ஹவுஸ்***

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் சோமசுந்தரம் சஞ்சீவன்

(உயர்தர வகுப்பு கணிதப்பிரிவு மாணவன், யாழ். இந்துக் கல்லூரி)

செல்வன் சோமசுந்தரம் சஞ்சீவன் 13.07.2000 வியாழக்கிழமை அகாலமரணமடைந்தார்.

இவர் சோமசுந்தரம் - ராஜினி தம்பதியினரின் அன்பு மகனும் காலம்சென்ற றஜீவன், நிலானி (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி) டிலானி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17-07-2000) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும்.

*முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (76435)

தகவல்:
க.சோமசுந்தரம்

### பிள்ளையாங்குட்டி சபாரத்தினம்

கல்வயல் வீதி, 1ஆம் கட்டை, சாவகச்சேரியை வதிவிடமாகவும் மட்டுவில் சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொண்டவருமான பிள்ளையாங்குட்டி சபாரத்தினம் நேற்று (15.07.2000) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலம்சென்ற பிள்ளையாங்குட்டி - சின்னாச்சி ஆகியோரின் அன்பு மகனும் காலம் சென்ற வேலுப்பிள்ளை - தங்கம்மா ஆகியோரின் அன்புமருமகனும் கண்மணி, தங்கம்மா, பாக்கியம், காலம்சென்ற இராசம்மா, கனகம்மா, கந்தவனம், துரைச்சாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் புவனேஸ்வரி, சிவபாதம், சிவபாக்கியம், சிவசுப்பிரமணியம், காலம்சென்ற தியாகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

***சி.நித்தியானந்தன்,***
*தில்லை கட்டி,*
*சுன்னாகம்.* (76432)

தகவல்:
ச.சேதுப்பிள்ளை
(மனைவி)

### திருமதி சிவபாக்கியம் சற்குணலிங்கம்

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியம் சற்குணலிங்கம் நேற்று (15.07.2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கோண்டாவில் கிழக்கு சற்குணலிங்கத்தின் அன்பு மனைவியும் கோப்பாயைச் சேர்ந்த காலம்சென்ற மாணிக்கம் - விசாலாட்சி தம்பதிகளின் மகளும் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சதாசிவம் - பராசக்தி தம்பதியினரின் மருமகளும் சுரேஷ்குமார் (லண்டன்), கவிதா, சகிலா, நிருஷா, பிருந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும் கோப்பாயைச் சேர்ந்த திருமதி சிவமணி அன்னலிங்கம், இலங்கநாதன், முருகேசபிள்ளை, சவுந்தலா நல்லநாதன், கந்தகுமார், செல்வகுமார் (நோர்வே) ஆகியோரின் சகோதரியும் கோண்டாவிலைச் சேர்ந்த அன்னலிங்கம், திருமதி சீதாலட்சுமி சபாரத்தினம், பழனித்துரை ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கோண்டாவில் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (76436)

தகவல்:
ச.சற்குணலிங்கம்
(கணவர்)

# அகதிப்பெண் மரணம் குறித்து விசாரணை கோரிப் போராட்டம்

இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட குமுதினி என்ற இலங்கைப் பெண்ணின் மரணம் குறித்து நீதி விசாரணை மற்றும் குற்றவாளிகளின் கைது ஆகியவற்றை வலியுறுத்தி மதுரை மாவட்டத்தில் உள்ள அகதிகள் முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தங்கள் வீடுகளில் கறுப்புக்கொடி ஏற்றிப் போராட்டம் நடத்தினார்கள்.

கூடல்நகர், அணையூர், வைக்கம் பெரியார் நகர், உச்சிப்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் இலங்கை அகதிகளே இத்தகைய போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

அத்துடன் பிரதமர் வாஜ்பாய், முதல்வர் கருணாநிதி ஆகியோருக்கு தமது கோரிக்கைகள் குறித்துக் கடிதங்களையும் இவர்கள் அனுப்பியுள்ளனர்.

திருகோணமலையிலிருந்து அகதியாக இந்தியாவிற்குச் சென்ற 25 வயதான குமுதினி இந்திய மீனவர்களால் கடத்தப்பட்டு, பின்னர் கடலோரத்தில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டது தெரிந்ததே.

# இனவிரோதியான ஜெயலலிதா இலங்கை அரசின் ஒற்றர்?

## இணை அமைச்சர் சந்தேகம்

இலங்கை அரசின் தூதுவரைச் சந்தித்தபின் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா வெளியிட்டு வரும் தமிழின விரோத அறிக்கைகளையும், கருத்துக்களையும் பார்க்கும் போது அவரை இலங்கை அரசின் ஒற்றர் என்று சந்தேகப்பட வேண்டியுள்ளது.

மத்திய புடைவை உற்பத்தித்துறை இணை அமைச்சரும் ம.தி.மு.க உறுப்பினருமான செஞ்சி ராமச்சந்திரன் பேட்டி ஒன்றில் இவ்வாறு கூறினார்.

ஜெயலலிதாவின் கருத்துக்கள் வெறும் உளறல் என்றும் இணை அமைச்சர் தெரிவித்தார்.

தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி ம.தி.மு.க வை தடை செய்ய வேண்டும் என்று கூறியது குறித்துக் கேட்கப்பட்ட போது "அவர் மக்கள் செல்வாக்கை இழந்து விட்டார்; அதை மறைக்கவே இப்படிக் குதர்க்கம் பேசி வருகிறார்" என்று செஞ்சி ராமச்சந்திரன் கூறினார்.

(இ-ஒ)

# எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்கள் தீண்டத்தகாதவர்கள் அல்லர்.

## மாநாட்டில் மண்டேலா உரை

டர்பன், ஜூலை 16

"எய்ட்ஸ்" நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கறைபடிந்தவர்களாகவும், தீண்டத்தகாதவர்களாகவும் நடத்தும் மனப்பான்மை ஒழிக்கப்படவேண்டும்.

இவ்வாறு தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் நடைபெற்ற எய்ட்ஸ் நோய்த்தடுப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த சர்வதேச மூன்று நாள் மாநாட்டில் நிறைவு தினஉரையாற்றிய நெல்சன் மண்டேலா தெரிவித்தார்.



மண்டேலா தனது உரையில் எய்ட்ஸைத் தடுப்பதற்கு அந்த நோய் குறித்து கல்வி அறிவூட்டப்பட வேண்டும்.

பாதுகாப்பான பாலுறவு, நோயால் தாக்கப்பட்டுள்ளவர்களுடனான உடலுறவைத் தவிர்த்தல் போன்றவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

அத்துடன் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களிடமிருந்து அவர்கள் வயிற்றில் உள்ள குழந்தைகளுக்கு கிருமிகள் பரவாதிருக்கும் வழிமுறைகளைச் செம்மைப்படுத்தும்படியும் மண்டேலா மருத்துவ விஞ்ஞானிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

(இ-ஒ)

# எரிமலை வெடிப்பினால் நிலநடுக்கம்

டோக்கியோ, ஜூலை 16

ஜப்பானில் மியாகிஜிமா தீவில் உள்ள 'ஒயாமா' எரிமலை ஒரே வாரத்தில் 4 ஆவது முறையாக வெடித்துத்தீக் குழம்பைக் கக்கியது.

டோக்கியோவிற்குத் தெற்கே 140 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தீவில் ஏற்பட்ட இந்த எரிமலை வெடிப்பினால் 6—2 ரிக்டேர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது இது மிக அபாயமான அளவு என்று புவியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(இ-ஒ)

# பிஜியில் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க மகேந்திர சௌத்திரி தீவிர முயற்சி!

# போராட மக்களுக்கு அழைப்பு!!

சுவா, ஜூலை 16

பிஜியில் பதவி நீக்கப்பட்ட பிரதமர்மகேந்திர சௌத்திரி மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

இதற்காகத் தன்னுடன் இணைந்து போராட வரும்படி பிஜி மக்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

பல இன ஒற்றுமை, சமயச் சகிப்புத் தன்மை, மனித உரிமைகள் ஆகியவை பேணப்படுவதற்காக அரசியல் சாசனப்படி அமைந்த தன்னுடைய அரசு மீண்டும் ஆட்சியில் அமர்த்தப்பட வேண்டும் என்றும் அதற்காகத் தன்னுடன் இணைந்து போராட வரும்படியும் மக்களுக்கு விடுத்த அழைப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிஜியில்மகேந்திர சௌத்திரியின் இனமான இந்திய வம்சாவளியினர் சுமார் 45 சத வீதமே உள்ளனர். ஆனால் கடந்த வருடம் நடந்த தேர்தலில் சௌத்ரி 60 சதவீத வாக்குகளுக்கு மேல் பெற்றுப் பிரதமராகியிருந்தார்.

இதிலிருந்து பூர்வீகக் குடிகளில் கணிசமானவர்கள் அவருக்கு ஆதரவு தந்திருப்பது தெரிகிறது.

ஆகவே சௌத்ரி ஆரம்பித்துள்ள போராட்டம் பிஜியின் அரசியல் நிலைமையை மேலும் சிக்கலாக்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

இதற்கிடையில் கிளர்ச்சித் தலைவர் ஜோர்ஜ் ஸ்பைட் புதிதாக அமைக்கப்படும் அமைச்சரவையில் தனது ஆதரவாளர்களை நுழைக்கமுயற்சித்து வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இதேசமயம் ஸ்பைட்டின் விருப்பப்படியே அதிபர்தெரிவு நடந்ததைத் தொடர்ந்து ஸ்பைட்டின் கட்டளைப்படி புதிய அரசு அமைந்தால் சர்வதேச எதிர்விளைவுகளை பிஜி எதிர்கொள்ள நேரிடும் என்று கொமன் வெல்த் அமைப்பு எச்சரித்துள்ளது.

நியூசிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் இத்தகைய எச்சரிக்கையை ஏற்கனவே அறிவித்திருந்தன.

(இ-ஒ)

## பிரான்ஸ் "பெஸ்டிவல்" தினத்தில்.

# பாரிஸ் நகரத்தின் ஊடாக பல மைல் நீள உணவுப் பந்தி

பாரிஸ், ஜூலை 16

பிரெஞ்சுப் புரட்சியின்வருடாந்தக் கொண்டாட்டமான "பெஸ்டிவல்" தினத்தை முன்னிட்டு பிரான்ஸில் நூற்றுக்கணக்கான மைல்கள் தூரத்துக்குத் தொடர்ந்து ஆயிரக்கணக்கில் மேசைகளை அடுக்கி நீண்ட உணவுப் பந்தி நடைபெற்றது.

பிரான்ஸின் வடகோடியிலுள்ள நகரான டக்கத் நகரில் இருந்து தலைநகர் பாரிஸின் ஊடாக மறுகோடியில் உள்ள ஸ்பானிய எல்லை வரை செல்லும் நீண்ட பெரும் வீதியில் மேசை, கதிரைகளைத் தொடர்ந்து அடுக்கி இந்த நீண்ட பந்தி உருவாக்கப்பட்டிருந்தது.

இந்தத் தொடர் பந்தியில் அமர்ந்து சுற்றுலாப் பயணிகள் உட்பட 40 லட்சம் மக்கள் தத்தமது வீடுகளில் இருந்து எடுத்து வந்த உணவு மற்றும் குடிவகைகளை அருந்தி மகிழ்ந்தனர்.

(இ-ஒ)

# தமிழ் வழிக்கல்வி மீதான தடை; தமிழக அரசு மேன் முறையீடு

சென்னை, ஜூலை 16

'தமிழ்நாட்டில் ஆரம்பக்கல்வியைத் தமிழில் கற்பிக்க வேண்டும்' என்ற அரசு ஆணையை சென்னை உயர் நீதிமன்றம் ரத்துச் செய்ததை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மேன் முறையீடு செய்துள்ளது.

தமிழ் உணர்வாளர்கள் பல கோரிக்கைப் போராட்டங்களை நடத்தியதன் பின்னர் தமிழ் நாட்டில் அனைத்துப் பாடசாலைகளிலும் 5 ஆம் வகுப்பு வரையிலான ஆரம்பக் கல்வி தமிழிலேயே கற்பிக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிட்டது.

ஆனால் இதை எதிர்த்து தனியார் பாடசாலை நிர்வாகிகள் சிலர் வழக்குத்தாக்கல் செய்தனர். சென்னை உயர் நீதி மன்றம் தமிழ் நாட்டில் தமிழ்க்கல்வியை ரத்துச் செய்து அந்த வழக்கில் தீர்ப்பளித்தது.

உயர்நீதிமன்றத்தின் இந்தத்தீர்ப்பை ரத்துச் செய்யக் கோரியே தமிழக அரசு தற்போது உச்ச நீதி மன்றத்தில் மேன் முறையீடு செய்துள்ளது.

ஒரு விசேட கொள்கையை உருவாக்கிச் செயற்படுத்த மாநில அரசிற்கு அதிகாரம் உண்டா? இல்லையா? என்பது குறித்த சட்டப்பிரச்சினையாக இந்த மேன்முறையீடு அமைந்துள்ளது.

(ஐ-ஒ)

# தமிழ்நாட்டுக்கு மேலதிக நீர்

சென்னை, ஜூலை 16

காவிரி நதி நீர் ஆணையம், தமிழ் நாட்டுக்கு மேலதிகமாக 60 லட்சம் கன அடி தண்ணீரைக் கர்நாடகா திறந்து விட வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளது

இரண்டு ஆண்டுகளுக்கு முன் காவிரிப் பிரச்சினை மேற்பார்வைக்காக அமைக்கப்பட்ட இந்த ஆணையம் பல்வேறு இழுபறிகளின் பின் இப்போது தான் முதல் முறையாகச் செயற்பட்டு உள்ளது.

கர்நாடகாவுக்கும் தமிழகத்துக்கும் 100 ஆண்டுகளாக இருந்துவரும் காவிரிப் பிரச்சினையில் ஆணையத்தின் செயல்பாடு ஒரு வெற்றி என்று கருதப்படுகிறது.

(ஐ)

# பிஹாரில் மதகுரு ஒருவர் நடுத்தெருவில் சுட்டுக் கொலை!

பாட்னா, ஜூலை 16

பிஹாரில் கத்தோலிக்க மதகுரு ஒருவர் நடுத்தெருவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கிறிஸ்தவப் பாடசாலை ஒன்றின் அதிபரான கஸ்கிற்றா என்ற மதகுருவே இனம் தெரியாதோரால் கொல்லப்பட்டவராவார்,

மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது வாகனம் ஒன்றினால் மோதப்பட்டு இவர் உயிரிழந்ததாகப் பொலீஸார் முன்னர் கூறியிருந்தனர்.

ஆனால் பிரேதப் பரிசோதனையின் போது இவர் நெற்றியில் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தது தெரிய வந்துள்ளது.

சுட்டவர்கள் மதகுருவின் மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தியாவில் கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல்கள் பரவலாக தற்போது நடந்து வருவதால் சம்பவம் நடந்த பகுதியில் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

(இ-ஒ)

## உத்தரப்பிரதேச மாநிலத்தில்

# சாரதியைத் தாக்கியதாக அமைச்சர் மீது முறையீடு

லக்னோ, ஜூலை 16

உத்தரப்பிரதேச கிராமத் தொகுதிகள்அமைச்சர் ராஜாராம் பாண்டே டிரக் சாரதியையும் அவரது உதவியாளரையும் அரசு இல்லத்தில் வைத்து சித்திரவதை செய்ததாகக் கூறப்படுகின்றது

கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் பயணம் செய்த காரின் பின் பகுதியை டிரக் வண்டி மோதியது இதனை அடுத்து அமைச்சரும், அவரது பாதுகாவலர் இருவரும், கார்ச் சாரதியும் சேர்ந்து தம்மை அடித்து துன்புறுத்தியதாக டிரக் சாரதி தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச் சாட்டுக்களை பாண்டே மறுத்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக முழு விவரங்களையும் அறிந்திட பாண்டேயுடன் பேச இருப்பதாக உத்தரப் பிரதேச முதலமைச்சர் ராம் பிரகாஷ்குப்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிஹார் மாநில அமைச்சர் லலித் யாதவ்வும் லொறிச் சாரதி மற்றும் அவரது உதவியாளரை சித்திரவதை செய்தமைக்காகத் தேடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-க)

மக்கள் யுத்தத்தின் மகத்தான தளபதி

அமரர் தோழர்

# க. உமாமகேஸ்வரன்

அவர்களின்

# 11 ஆவது சிரார்த்த தினம்



புரட்சியாளர்கள் என்றுமே
மண்ணில் புதைக்கப்படுவதில்லை
விதைக்கப்படுகின்றனரெனும்
விந்தைதனை உலகறியச் செய்தவனே!
வியர்வையும் கண்ணீரும்
மண்ணை நனைக்கும்
விவேகமும் வேகமும் விண்ணைத்தொடும்
வீரமும் தீரமும் மண்ணை மீட்கும்
தோழா! உன் இலட்சியத்தில் உறுதி கொண்டு
நாமும் எந்த மொழியாலும்
எந்த மதத்தாலும் எந்தச் சாதியாலும்
பிரிக்க முடியாத சமூக அமைப்பினை
நிறுவி சகோதரத்துவப் பயிரை
அறுவடை செய்வோம்.

தமிழர் உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த, பலியான தலைவர்கள், தளபதிகள், சக போராளிகள், கழகக் கண்மணிகள், பொதுமக்கள் அனைவருக்கும்

**எமது இதய அஞ்சலிகள்**

**ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DPLF)**
**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE)**

(76430)

---

## சேவை நலன் பாராட்டு

யா \ தோப்பு அருள்நந்தி வித்தியாலயம்
அச்சுவேலி

### திரு. பொ. நடேசன்

(இலங்கை அதி.சேவை தரம் 2)

03 - 01 - 1961 இல் ஆசிரியப்பணியில் இணைந்த திரு. பொ, நடேசன் அவர்கள் 22 வருட அதிபர் சேவையில் 23 - 02 - 1991 முதல் 16 – 07 – 2000 வரை எங்கள் பாடசாலையில் அதிபராக இருந்து சிறந்த முறையில் சேவையாற்றி இன்று தனது 60 ஆவது அகவையை நிறைவுசெய்து ஓய்வு பெறுகிறார். இவர் தனது ஓய்வுக்காலத்தில் சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
அச்சுவேலி.

(76500)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கரவெட்டிப் பிரதேச செயலக கிராம அலுவலரான
திரு. மா. சிவனேசன் அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி

### மாணிக்கம் இலட்சுமி

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.

(சி/12227)

---

## நன்றி நவிலலும்

### வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர்

### ஆழ்வாப்பிள்ளை சிற்சபேசன்

(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்)

மண்ணில் 08-09-1943 விண்ணில் 17-06-2000

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்
குலம் விளங்க அயராது உழைத்த பெருமகனே!
பிரிந்து மாதம் ஒன்று சென்றிடினும்
கவலை தீரவில்லை கண்ணீர் குறையவில்லை
எங்கள் நினைவலைகள் நீங்காதையா!

எங்கள் குலதெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், ஆறுதல் கூறி எமது துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், பூமாலைகள் சாத்தியும் மலர்வளையம் இட்டும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியும் இரங்கல் உரை நிகழ்த்தியும் சிறப்புறச் செய்தோருக்கும் மேலும் தேவை அறிந்து பல வழிகளிலும் உதவியோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று 16—07—2000 எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

உடுவில்.

(சி/12224)

**உதயன்**

## தேவை: நேர்மை,தியாகம்

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வகுக்கப்படும் திட்டத்தைத் தனியாக நிறைவேற்றாமல் அரசமைப்புச் சட்டத்துடன் - அரசியல் சாசனத்துடன் - சேர்த்து நிறைவேற்ற அரசு எண்ணிய போதே இவ் விவகாரம் இழுபடும் என்று அவதானிகள் அச்சம் தெரிவித்தனர்.

இனப்பிரச்சினைக்கெனத் தனியான, நீதியான தீர்வு ஒன்றை வகுத்து அதனை அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்துக் கொண்டிருக்கலாம். இப்போதைய அரசமைப்புச் சட்டத்தை திருத்தவேண்டும் என்று அரசு எண்ணியிருந்தால், தேவை என்று கருதியிருந்தால் அந்தக் காரியத்தை வேறாகச் செய்திருக்கலாம்.

இரண்டையும் சேர்த்து ஒரே வேளையில் செய்யப் புறப்பட்டு ஒன்றாகக் குழப்பி அடிப்பதாகவே அரசின் செயற்பாடு அமைகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு வகுத்துள்ள திட்டம் இப்போதைய வடிவில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றவில்லை. பெரும் அதிசயமாக, வரலாற்றுத் திருப்பமாக, தமிழர் பிரச்சினைக்கு நீதியான, போதுமான தீர்வுத்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டாலும் கூட, அரசமைப்புச் சட்டத் திருத்தத்துடன் சேர்த்துக் கொண்டு வர முயற்சிக்கப்பட்டால் பெரும் காலதாமதம் ஆகும் என்ற நிலை உருவாகியுள்ளது.

சந்திரிகா குமாரதுங்க, 1994 ஆம் ஆண்டில் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட்ட போது, ஜே.ஆர். ஜெயவர்த்தனா தமது சொந்த அதிகார நலனை அதிகளவில் முன்னிறுத்திக் கொண்டு வந்த நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கப் போவதாக வாக்குறுதி அளித்திருந்தார் - டமாரம் அடித்தார். அந்த வாக்குறுதியை நிறைவேற்ற ஜே.வி.பிக்கு உறுதி அளித்து குறிப்பிட்ட கால அவகாசம் கூட வழங்கியிருந்தார்.

எனினும் கடந்த வருடம் நிறைவேற்று ஜனாதிபதி பதவிக்கான தேர்தலை நடத்தி அதில் வெற்றியும் கண்டு, மீண்டும் அந்தச் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறார்!

அரசமைப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தமது ஆதரவு தேவையெனில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை உடனடியாக ஒழிக்க வகை செய்ய வேண்டும் என்று ஐக்கியதேசியக்கட்சி விடாப்பிடியாக நிற்கிறது.

ஆனால் அரசாங்கமோ - ஆளுங்கட்சியோ, சந்திரிகாவின் இப்போதைய பதவிக்காலம் முடியும் வரை - 2005 ஆம் ஆண்டு வரை - இருக்க வேண்டும் என்று விரும்புகிறது. அதில் விட்டுக் கொடுக்க முடியாது எனவும் அரச உயர்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் தான் மும்முரமாகவும் அக்கறையுடனும் ஈடுபட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது அரசாங்கத்தின் சகாக்களும் வெளி உலகத்துக்குக் காட்டி வருகிறார்கள் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் நிறைவேற்று ஜனாதிபதி பதவியை அதன் பொருட்டுத் தியாகம் செய்வதற்குத் தயாரில்லை!

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் அரசுக்கு அக்கறை இருப்பது உண்மையானால் -

தமிழர்கள் நாட்டின் தேசிய இனங்களில் ஒன்று என்ற அடிப்படையில் அவர்களுக்குள்ள சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, ஆகக் குறைந்தது பூரண சுயாட்சி அதிகாரம் வழங்கும் திட்டத்தையேனும் நேர்மையுடனும் உருவாக்க வேண்டும். அதனை நிறைவேற்றத் தடையாக - முட்டுக்கட்டையாக - விளங்கும் நிறைவேற்று ஜனாதிபதி பதவியைத் தியாகம் செய்ய வேண்டும்.

நாட்டு நலனுக்குத் தேவையான இந்த இரண்டையும் செய்யுமா அரசு?

# உண்மை சூரியனைப் போலப் பிரகாசிக்கும் திரையிட்டு மறைக்க முடியாது அதனை!

தீவொன்றைச் சேர்ந்த மக்கள் ஒரு தினம் வழமைபோல உதயத்தில் நித்திரைவிட்டு எழுந்தார்கள். அன்றைய தினம் அவர்களால் சூரியனைக் காண முடியவில்லை. தீவை இருள் கவ்விக் கொண்டது. வானம் நாற்புறமும் கரும் முகில் கூட்டங்களால் மூடப்பட்டிருந்தது. தினசரி அதிகாலையில் சூரிய தரிசனம் செய்து மற்றைய கடமைகளைப் பார்ப்பவர்களுக்கு இது பெரிய ஏமாற்றமாக இருந்தது. இந்த நிலை நாளையதினம் நீடிக்காது என மக்கள் நினைத்தனர். ஆனால் மறுதினமும் அவர்களுக்குச் சூரிய தரிசனம் கிடைக்கவில்லை. கிடைத்ததெல்லாம் ஏமாற்றமே.

### வாசகர் உள்ளம்

காலநிலை பற்றி பலவிதமான செய்திகள். மக்கள் மனம் குழம்பிப் போனார்கள். சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை - சூரியதரிசனக் காரர்கள்- அனைவரும் சீரற்ற காலநிலை பற்றியே பேசிக்கொண்[illegible]. நாள்கள் நகர்ந்தன. வாரங்க[illegible] வாகின. சூரியோதயத்தைத் தொடர்ச்சியாக மக்களால் காணவே முடியவில்லை.

சிறியவர்கள், பெரியவர்களை பார்த்துப் பல கேள்விகள் கேட்டார்கள். இந்த இருள் இப்படியே தொடர்ந்து எத்தனை மாதங்களுக்கு நீடிக்கப்போகிறது என்பது அவர்களின் முக்கியமான கேள்விகளுள் ஒன்று. சில சோதிடர்கள் இந்தக் காலநிலை பலமாதங்கள் நீடிக்கலாம் என்றும் இப்போதைக்குச் சூரியனை பார்ப்பதை எல்லோரும் மறந்து விட வேண்டியதுதான் எனவும் புரளிகளைப் பரப்பியிருந்தனர். இதனால் அனைவரும் தடுமாறிப் போனதே பலரதும் ஐயப்பாடான கேள்விகளுக்கெல்லாம் காரணமாக அமைந்தது. ஆனால் முதியவர்களுக்கும் படித்தவர்களுக்கும் தெரியும் எஞ்ஞான்றும் எந்தச் சக்தியாலும் சூரியனை மறைத்து நிற்க முடியாதென்பது. ஒருநாள், ஒருவாரம் அல்லது ஒரு வருடம் கழித்து என்றோ ஒரு நாள் கதிரவன் வானத்தில் இருளைக்கிழித்துப் பிரகாசிக்கவே செய்வான் என்பதும் இந்த நியதிக்கு அழிவேயில்லை என்பதும் படித்தவர் தம் சிந்தனையாக இருந்தது.

### உண்மை

உண்மை சூரியனைப் போன்றது. காலநிலையில் மாற்றங்கள் வரலாம். காலநிலை மாற்றம் ஒரு நாளைக்குச் சூரியனை மறைக்கலாம்.அந்த மறைப்பானது சிலகாலம் நீடிக்கலாம். ஆனால் அது உலகில் நிரந்தரமான ஒன்றாக மாறிவிட முடியாது. கருமுகில் கூட்டங்களால் எத்தனை காலத்துக்குச் சூரியனை மறைத்து நிற்க முடியும்?

உலகம் உள்ளவரை அது நடக்கக் கூடிய விடயமுமல்ல. என்றோ ஒரு நாள் கதிரவன் வானத்தில் இருளைக் கடிந்து துடைத்துவிட்டுப் பிரகாசிக்கவே செய்வான். ஆதவனை எந்தச் சக்தியும் எவ்விதம் காலம் முழுவதும் மறைத்து நிற்க முடியாதோ அதைப் போலவே உண்மையையும் எவராலும் எக்காலமும் திரைபோட்டு மறைத்துவிட இயலாது.

### 'செல்லக்கூத்தன்'

ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறை பிறக்கக் கூடிய மாபெரும் கவிஞன் மகாகவி பாரதி. "தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் தருமம் மறுபடியும் வெல்லும்" என்பது அந்தப் பேரறிஞனின் கூற்று. உண்மையில் இன்று எம்கண் முன்னே நடந்துள்ளது என்ன? தருமத்துக்கும் சூதுக்கும் இடையில் ஒரு நாற்பத்தைந்து நாள் போராட்டம். இறுதியில் தருமம் வென்றுவிட்டது. உண்மை சூரியனைப் போன்றது என்பதும் நிருபணமாகிவிட்டது. இது இந்நாளில் 'உதயன்' எங்கள் எல்லோருக்கும் தந்துள்ள பாடம் ஆகும். தருமத்தை நம்புவோம். தருமம் வெல்லும்.

*

# பூதவுடல் அழியா வரம் பெற்ற சாங்கோ பாங்கோ சுவாமிகள்

**யாக்கோமே கொன்சால் வெஸ் என்னும் சாங்கோ பாங்கோ சுவாமிகள் பரமபதம் அடைந்த 258 ஆவது ஆண்டு நினைவை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது. நாளை 17.07.2000ஆம் திகதி அவரது நினைவு தினமாகும்.**

பூலோகத்தில் மாபெரும் புகழ் பெற்றவரும் பூதவுடல் அழியாத புனித வரம் பெற்றவரும், கத்தோலிக்கத் திருச்சபையில் கீர்த்தியுடையவருமான புனித பிலிப்நேரியாரின் தியானப் பிரசங்கியார் சபையைச் சேர்ந்தவர் யாக்கோமே கொன்சால் வேல் என்னும் இயற்பெயரையுடைய சாங்கோ பாங்கோ சுவாமிகள்.

### ஞாயிறு நற்பிரசாதம்

29 வயதில் இலங்கை வந்து 37 வருடங்கள் மிகச்சிறந்த அப்போஸ்தலிக்கத் தொண்டு புரிந்து 66 வயதில் 17-07-1742இல் இவர் அமரரானார்.

சாங்கோ பாங்கோ சுவாமிகள் தலை சிறந்த தர்க்கப்பிரசங்கியாராகவும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் அதாவது வேதகலாபனைக் காலத்தில் கிறிஸ்தவ மறை பரப்பும் உயர்ந்த ஒளிச் சுடராகவும் திகழ்ந்தார். தமிழ், சிங்கள, ஒல்லாந்த, போர்த்துக்கேய மொழிகளில் நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இவர் எழுதியுள்ளார்.

தமிழ்தெரியாத கிறிஸ்தவ மிசனரிமாருக்குப் பெரும் உதவி புரியும் வகையில் போர்த்துக்கேய - ஒல்லாந்த மொழிகளிலே தமிழ் அகராதி ஒன்றையும் உருவாக்கிய பெருமையும் இவருக்குண்டு. அக்காலப் பகுதிகளில் அச்சக வசதிகள் அற்றபடியினால் சாங்கோ பாங்கோ சுவாமிகள் அயராத முயற்சி எடுத்து தமது நூல்களையும் அகராதிகளையும் பலகை எழுத்துப் பிரதிகளாகத் தயாரித்து வெளியீடு செய்தார்.

இதற்காக அவர் தொடர்ச்சியாகப் பல நாள்கள் தூக்கமின்றிச் செயலாற்ற வேண்டியிருந்ததை அவரது வரலாற்றிலே விஷேசமாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இன்று இலங்கையில் தமிழர், சிங்களவர், கத்தோலிக்கர் அனைவரும் உபயோகிக்கும் ஜெபப்புத்தகங்கள் அனைத்துமே அவரால் எழுதப்பட்ட நூல்களின் ஆதாரமாக அமைந்தவையே!

அவர் எழுதிய நூல்களில் சில இன்னமும் பாவனையில் உண்டு.

சுவிசேஷ விருத்துரை, கத்தோலிக்க வேதாகம சங்ஷேபம், சிந்துப் பிரார்த்தனை, வியாகுல பிரசங்கம் அல்லது பசாம் ஆகியன கிறிஸ்தவ மக்களால் பாதுகாக்கப்பட்டு வருவதுடன் பாவனையிலும் இன்று வரையுள்ளது. வியாகுல பிரசங்கத்தை எந்த மதத்தவர் வாசித்தாலும் கிறிஸ்து நாதரின் திருப்பாடுகளைத் தரிசித்த அனுபவத்தையே அடைவர். மெய்சிலிர்க்க வைக்கும் இவரது வசன நடையில் கூட பக்திப் பரவசம் வரிக்கு வரி தென்படும்.

**சி.பி. சேனராயர்**

அவரைக் கொலை செய்ய முயன்றவர்களுக்குக் கூட அற்புதம் செய்து உயிர்தப்பும் ஆற்றல் பெற்றிருந்து 17-07-1742இல் இவர் பரகதி அடைந்தார்.

பல்லாயிரக்கணக்கான மெழுகு வர்த்திகளால் அலங்கரிக்கப்பட்ட பாடையில் இவரது திருவுடல் வைக்கப்பட்டு மரண ஊர்வலம் நடத்தப்பட்டது. சிலாப மறை மாவட்டத்தில் உள்ள போளவத்தை ஆலயத்தில் இவரின் கல்லறை இன்றும் இருக்கிறது.

☆

# பேச்சுவார்த்தை

இனப்பிரச்சினை சம்பந்தமாக பொ.ஐ.முன்னணி அரசும், ஐதே.கவும் சேர்ந்து தயாரித்த தீர்வுத் திட்டம் -

தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை; அதை முற்றாக நிராகரிக்கின்றோம்.

ஜனாதிபதியிடமே உறுதியாக - தெளிவாகக் கூறிவிட்டார்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினர்.

ஜனநாயக வழிமுறைகளில் பூரண நம்பிக்கை வைத்துள்ள - வன்செயல்களை ஆதரிக்காத கூட்டணியினரே இப்படிக் கூறிவிட்டார்கள்!

இவர்கள் மட்டுமல்ல -

ஆரம்பத்தில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு பின்னர் ஆயுதத்தைக் கைவிடாமல் போராட்டத்தை மட்டும் கைவிட்ட -

ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ ஆகியோரும் திட்டத்தை நிராகரித்து விட்டார்கள்.

அரசுடன் இணைந்து செயற்பட்டுவரும் ஈ.பி.டி.பியினரும் மற்றும் புளொட்டும் ஏற்க மறுத்து விட்டார்கள்.

### மணிமண்டபம்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் போன்ற ஏனைய மிதவாதக் கட்சியினரும் நிராகரித்துவிட்டார்கள்.

யாருடைய உறுதியான நிலைப்பாட்டினால் - போராட்டத்தினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதோ, உலகம் கரிசனைகாட்ட உந்தப்பட்டதோ அந்தப் போராளிகளும் தீர்வுத் திட்டத்தை நிராகரித்து விட்டார்கள்.

இருந்தும் -

இந்தத் தீர்வுத் திட்டம் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் என்றும் -

நாடாளுமன்றத்தில் இது சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் -

காலப்போக்கில் தமிழ் மக்களும் இதனை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை தமக்கு இருக்கின்றது என்றும் -

ஆளும் கட்சியினரும் ஆதரவாளர்களும் அடிக்கடி கூறிவருகின்றார்களே!

அவ்வாறாயின் திட்டத்தை ஆதரிக்கப்போகும் புதிய தமிழர் கூட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றதா?

இனப்பிரச்சினை இன்று நேற்று ஏற்பட்டதன்று: 1920 களிலேயே அது 'கரு'க்கட்டி விட்டது.

இதைத் தீர்ப்பதாகக் கூறும் அரை, கால். அரைக் கால் திட்டங்கள் முன்வைக்கப்பட்டபோதெல்லாம் அவற்றை ஆதரித்து தமிழ்ப் பெரும்பான்மையினரின் ஒற்றுமையையும் உறுதிப்பாட்டையும் சிதைத்தவர்கள் சிங்களப் பெரும்பான்மையினர் அல்லர்!

பணத்துக்கும் பதவிக்கும் பல்லிளித்த பச்சோந்தித் தமிழர் சிலரே அந்தக் கைங்கரியத்தைச் செய்தவர்கள்.

ஈழத்தமிழரின் பிரச்சினை இன்று உலகத்தின் கவனத்தைக் கவர்ந்துவிட்டது.

தமிழ்மக்களின் பிரச்சினை நியாயமான முறையிலே தீர்க்கப்பட வேண்டும் என எல்லா நாடுகளும் வலியுறுத்தத் தொடங்கியுள்ளன.

ஏதோ ஒரு தீர்வைக் கொடுத்தே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் இருந்து விடுபட முடியாமல் தவிக்கின்றது அரசு.

வரலாற்றில் ஒரு திருப்பம் ஏற்படக்கூடிய இந்தக் கட்டத்தில் -

பச்சோந்திகள் மீண்டும் பல்லிளிக்கப் போகிறார்களா? துரோகிகள் மீண்டும் தம்மைத் திணித்துக் கொள்ளப் போகிறார்களா?

இப்போதைய நிலையில், முதலில் -

பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டியது தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் அன்று.

தமிழ் அமைப்புக்கள், கட்சிகள் - போராளிக் குழுக்கள் தமக்குள்ளே மனம்விட்டுப் பேசவேண்டும்.

ஓட்டை, உடைசல்கள் அடைக்கப்படவேண்டும்.

அவரைப் பார்த்து இவர். இவரைப் பார்த்து இன்னொருவர் எனக் கைதூக்கி ஆதரிக்கும் கயமைக்கு ஆப்பு வைக்கப்பட வேண்டும்.

**இந்த வரலாற்றுக் கடமையைத் தலைவர்கள் சரியாகச் செய்வார்களா?**

*சித்தன்*

## குமுதினி சேவை உடனடியாக சாத்தியம் இல்லை

நெடுந்தீவுச் சேவையிலுள்ள குமுதினி படகுக்குத் தேவையான இயந்திர உதிரிப்பாகங்கள் முற்றாக எடுத்துவரப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

உதிரிப்பாகங்களின் தொகுதி மட்டுமே எடுத்துவரப்பட்டுள்ளது. உதிரிப்பாகங்கள் முழுமையாக வந்து சேரும் வரை திருத்த வேலைகள் இடம்பெறுவது சாத்தியமில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதியில் இருந்து மேற்படி படகுச் சேவை இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-111)

## தொடர்பு கொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை16

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் கீழ்க் காணும் பத்துப் பேரையும் தமது அலுவலகத்தில் சமுகம் தருமாறு கேட்டுள்ளனர்.

★ பொன்னையா சநயன் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

★ சின்னத்துரை கேதீஸ்வரன் - மடத்தடி, மீசாலை

★ அருணாசலம் பத்மநாதன் - தீப்வாசா, மீசாலை வடக்கு, மீசாலை.

★ லோகேஸ்வரன் தாமோதரம் பிள்ளை - சாவகச்சேரி.

★அன்ரன் ராசம்மா - கண்டி வீதி, எழுதுமட்டுவாழ்.

★ சிவபாலன் சாந்தகௌரி - 38/1 (141). 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

★ பரமநாதன் கனகசபை-36/12, காட்டுக் கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

★ மனோகரன் சண்முகநாதன் - தபால்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

★ தம்பிப்பிள்ளை சோமசுந்தரம்- 2,புகையிரத வீதி, சாவகச்சேரி.

★ டானியல் செபமாலையம்மா - சிறுவர் இல்லம்,கைதடி. (இ-3)

## பொதுசன உதவிப் பணம்

பளைப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது வலிகாமம் பகுதியில் வசிக்கும் 'பொதுசன உதவிப்பணம்' பெறுபவர்கள் தமது ஜூலை மாதக் கொடுப்பனவை எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை மானிப்பாய் தபாலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

### நாளை

ஆடி 2

திங்கட்கிழமை

*திதி:* பிரதமை

முன் இரவு 9.36 வரை

*நட்சத்திரம்:* உத்தராடம்

பிற்பகல் 3.10 வரை

*சுபநேரம்:* 12.00 - 1.30

*ராகுகாலம்:* 7.30 - 9.00

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

**எந்த வீட்டில் நூல் நிலையம் இருக்கிறதோ அந்த வீட்டில்தான் உயிர் ஒளி இருக்கிறது. உலகில் இறவாத பொருள் புத்தகங்களே**

*- சோயத்தே*

# விலங்கு உலகத்தில் பாலினப்போர்

## இலிங்கத்தின் இயற்கைச் சரிதம் - III



ஆண்மயிலின் 'ஆடை' அலங்காரமும், ஆடல் அழகும். இதை விஞ்ச எதுவுமில்லை.



ஆண் பெண் கிலி மொற் பறவைகள் (GUILLEMOTS) பெண் ஆணைச் சரியாகத்தான் தேர்ந்தெடுத்திருக்கின்றது போலும். அடைகாத்தலுக்குப் பக்கத்துணையாக நிற்கின்றதல்லவா?





சாந்திமுகூர்த் தப் பரிசுகள். இங்கு ஆண்களே தான் 'பாலும் பழமும்' ஏந்தி வருவார்கள்.

இனக் கலப்பிற்குமுன் ஆண் தருப்பைப்புதர்த் தத்துவெட்டியன் (SAGE BUSH CRICKET) தனது செட்டைகளை பெண்ணுக்கு உணவாகத் தரும். செட்டைகளை விரித்து வைத்திருப்பது ஆண். மேலே இருந்து கொண்டு சுவை பார்ப்பது பெண். இரைப்பை ஊடாக இதயத்தைக் கவரலாம் போலும்! உள்வைப்பு (INSET):- ஒரு பெண் புதர் தத்துவெட்டியன் ஆணினால் தரப்பட்ட விந்துப் பொதியைச் சுவைத்து மகிழ்கின்றது. உண்பதற்கென்றே, இனக்கலப்பின் போது இது ஆணினால் தரப்பட்டதாகும்.

*விலங்குகளின் 'கிசுகிசு' கதைகளில் மேலும் சிலவற்றைக் கவனிப்போம்:-*

### ஆராய்ந்து தெரியும் பெண்கள்
### (CHOOSY FEMALES)

இவை ஆராய்ந்து திரிபவையல்ல; ஆனால் ஆராய்ந்து தெரிபவை. இவற்றைக் கவர்வது ஆண்களுக்கு மிகவும் கடினமான செயல். அழகைக்காட்டியும், ஆடியும், பாடியும், உணவு தந்தும், அடைகாப்பதிலும், குஞ்சுகளைப் பராமரிப்பதிலும் உதவுவதாகச் சைகை காட்டியும் பல இன ஆண்பறவைகள் தம் பெண்ணினத்தைக் கவர முற்படும்; தோல்வி கண்டாலும் தொடர்ந்து முயற்சியில் ஈடுபடும்.

சுவர்க்கத்துப் பறவைகள் காகக் குடும்பத்திற்குரியவை. ஆயினும் ஆண்கள் மிகவும் கவர்ச்சியானவை. இவை தமது அழகான இறகுகளை விளம்பரப்படுத்தியும், ஆடியும், பாடியும் பெண்களைக் கவர முற்படும். ஆண் மயிலின் ஆட்டமும் பெண் மயிலின் அடக்கமும் நீங்கள் அறிந்ததே. கிலிமொற் (GUILL-EMOT) கடற் பறவைகளில், இனவிருத்திக் காலத்தில்(ஆண்டுக்கு ஒருமுறை) பெண் ஒரேயொரு முட்டையைத்தான் இடும்; அதனால் அடைகாப்பதில் உதவக்கூடியதாகவும், குஞ்சுக்கு உணவளிப்பதில் பங்குகொள்ளக் கூடியதுமான ஆணைத்தேர்ந்தெடுப்பதில் கூடிய கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

### மணப்பந்தல்கள்
### (BRIDAL BOWERS)

பவர் பறவை (BOWER BIRDS) ஆண்கள் அழகான பந்தல்களை அமைத்து, அவற்றை அலங்கரித்து, பெண்ணுக்குக் காட்டி அதைக் கவர முற்படும். பெண் பந்தலை ஆராயும் பொழுது திடீரென்று பாய்ந்து மடக்கவும் முயற்சிக்கும்(மனிதக் குணம் போலும்!).

### வேறுபட்ட இயல்புகள்

வேறுபட்ட இனங்களுக்கு வேறுபட்ட இயல்புகள் பொருட்டாகப்படும். இனக்கவர்ச்சியை பொறுத்தவரை இனத்துக்கு இனம் வேறுபாடுகள் உண்டு. உதாரணமாக கப்பி(GUPPY) மீன்களில், ஆண்களின் பிரகாசமான செம்மஞ்சள் நிறமே பெண்களுக்குக் கூடுதலாகப் பிடிக்கும். நிறம்பார்த்து மணம் முடிப்பார்கள் போலும்!

### பெண்ணுக்கு வரதட்சணை
### (BRIDAL OFFERING)

சில இனங்களில், ஆண்கள், தம்மினப் பெண்களுக்கு கையுறை கொடுத்துக் கவர முற்படும். இதிலும் மனிதன் தனது காதலிக்கு 'PRESENTS' கொடுப்பது பிந்திய ஏற்பாடுதான்; பல இன அங்கிகள் இதிலும் முன்னோடிகளாகத் திகழுகின்றன. தர்ப்பைப்புல் தத்துவெட்டியன் (SAGE BUSH CRICKET) ஆண் தன் செட்டைகளையே புணர்ச்சியின் முன் பெண்ணுக்கு உணவாகக் கொடுத்து மகிழும். பெண்ணின் இதயத்தை கவருவது அதன் வயிற்றின் மூலம் போலும்! வடதுருவக் கடற்பட்சி (ARCTIC TERN) ஆண், சுவையான மீனை உணவாகக் கொடுத்து பெண்ணைக் கவர முற்படும். காதலாடல் உணவு விநியோகத்தின் அளவின் அடிப்படையில் பெண் கவரப்படும். குஞ்சுக்கு இரை தேடும் போது பெண்ணுக்கு எவ்வளவு தூரம் உதவ முடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாக அமையும்.

-குகன்-



மணப்பந்தற்பறவை (BOWER BIRD). ஆண் பறவை மணப்பந்தலை அமைத்தபின் அதை அலங்கரிப்பதில் ஈடுபட்டுள்ளது. அங்கு அழகிய கனிகளைக் கொண்டு வந்து சேர்க்கின்றது. மணப்பந்தலை அலங்கரிக்கும் முறையை மனிதன் இதனிடமிருந்து கற்றுக் கொள்ளலாம்.

### கூட்டுக்கலை நிகழ்ச்சி
### (TEAM DISPLAY)

சில அங்கிகளைப் பொறுத்தவரை ஆண்கள் கூட்டமாக பெண்ணின் முன் ஆடியும் பாடியும் தம் திறமையை வெளிப்படுத்தும். கூடிய திறமைசாலியை பெண் தேர்ந்தெடுக்கும். (திறமைசாலித் தேர்வில் பெண் திறமைசாலியோவென்பது வேறுவிடயம்). நீண்ட வால் மனகின் (LONG TAILED MANAKIN) பறவைகள் இந்த நடைமுறையைத்தான் பின்பற்றும்.

### கொம்மான்களின் சிவப்பு விளக்கு மாவட்டம்
### (RED LIGHT DISTRICT FOR UGANDAN HOB)

இந்த மானினத்தில் ஆண்கள் தம் கெட்டித்தனத்தை வெளிப்படுத்தும். "வியாபார" நோக்குடன் பெண்கள், "கடைக்கு"வரும். (FEMALES COME SHOPPING FOR SEX). புல்வெளியில் கூடிய பிரதேசத்தை தனதாக்கி வைத்திருக்கும் ஆண்களுக்குக் கூடிய(பெண்) வேட்டை கிடைக்கும்.

### தனித்தன்மையான அழகை விளம்பரப்படுத்துதல்

சில இனங்களுக்குரிய ஆண்கள் தமது தனித்தன்மையான அழகை வெளிப்படுத்தி விளம்பரப்படுத்தி தம்மினப் பெண்களைக் கவர முற்படும்; சாதாரணமாக இந்த இயல்புகள் (அலங்கார அடையாளங்கள்) மறைந்திருக்கும். இந்த நடைமுறையைத்தான் புல்வெளி கிறவுசும் (SAGE GROUSE), இராச சுவர்க்கப் பறவையும் (KING BIRD OF PARADISE) கையாளும்.



அழகை விளம்பரப்படு… கப்பறவை (KING BI… முன்பக்கப் பார்வை.



அழகை விளம்பரப்படு… GROUSE) ஆண். பெ… இது போதுமா? பெண்… இது ஆணின் முன்பக்…



ஆண் துருவ கடற்பட்… காதலிக்கு சுவையான… றது. இதுவும் இரைப்… விடும் தூது.




சப்பி (GUPPY) மீன்கள், ஆணும் பெண்ணும். பெரியது பெண். சிறியது ஆண். பிரகாசமான செம்மஞ்சள் நிறமுடைய ஆண்களே பெண்களைக் கூடுதலாக கவரும்.



# ார்கள்



ரப்படுத்தும் ஆண் இராச சுவர்க் NG BIRD OF PARADISE). இது வை.




ரப்படுத்தும் புதர்க்கோழி (SAGE ண். பெண்ணின் கண்ணை நிரப்ப பெண்தான் தீர்மானிக்க வேண்டும். ன்பக்கப் பார்வை.



ற்பட்சி (ARCTIC TERN) தனது யான மீனைப் பரிசாகத் தருகின் கிரைப்பை ஊடாக இதயத்துக்கு

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்



ஆண் ராஜியானா சுவர்க்கப் பறவை தனது இறகழகை இப்படி விளம்பரப் படுத்துகின்றது. அருகில் பெண் 'அழகி' இருந்து பார்த்து இரசிக்கின்றது. இறகழகில் பெண்ணை மயக்கித் தன் வலையில் வீழ்த்தும் இந்த மன்மதக்கலையில் இவை சாதுரியம்மிக்கவை. மனிதனுக்கு வழிகாட்டியா?

---

# இடரிலும் தொடரும் ஜெய்ப்பூர் சேவை

யாழ். நகரில் கடந்த மே மாதம் 10 ஆம் திகதியையும் அதை அடுத்து வந்த நாள்களிலும் மீண்டும் ஒரு மக்கள் இடம்பெயர்வு - பெரிய அளவில் - இடம்பெற்றது.

ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டத்தினராகிய நாமும் கிட்டத்தட்ட ஐந்து நாள்களாக ஊரடங்கு தளர்ந்த குறுகிய கால இடைவெளிகளில் சிரமங்களுக்கு மத்தியில் தொல்புரத்திற்கு இடம்பெயர்ந்தோம். செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு எமது இடப்பெயர்வுக்கு வழித்துணை தந்து உதவியது. அது மட்டுமன்றி சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் வாகன வசதியும் அளித்துதவியது. அவர்களின் உதவியினாலேதான் சேதமில்லாமல் போர்முனைச் சூழலில் இருந்து நாம் பத்திரமாக எமது பொருள்களுடன் வெளியேற முடிந்தது. எமது ஸ்தாபனத்துடன் இணைந்து செயலாற்றிய செஞ்சிலுவைச் சங்க நிபுணர் திரு.fபிறஸ் பற்றிக் அவர்களின் உதவியை நாம் என்றென்றும் மறக்க முடியாது. அவர் முன்னின்று எடுத்த முயற்சியினால்தான் நாம் செஞ்சிலுவைச் சங்க களஞ்சியப் பணிமனையில் எமது சேவைகளை மீண்டும் ஆரம்பித்ததும் சாத்தியமானது.

இரண்டாயிரமாம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து எமது 14 ஆவது ஆண்டு சேவை இடப்பெயர்வுக்கு மத்தியில் ஆரம்பமாகிறது. கடந்த 13 வருடங்களில் நாம் கால்களையிழந்த 2069 பேருக்கு செயற்கைக் கால்களைப் பொருத்தி உள்ளோம். 119 செயற்கைக் கைகளையும், 59பேருக்கு (போலியோ மற்றும் அங்கக் குறைபாடுள்ளவர்களுக்கு)



நவீன செயற்கைக் கால் தயாரிப்பில் பயிற்சி

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சைப்பகுதியைச் சார்ந்த நிபுணர் டாக்டர். தயாளன் அம்பலவாணர் மாதாந்தம் எமது ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்து அவயவக் குறைபாடு மற்றும் இயன் மருத்துவம் சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கி வருகிறார். மற்றும் டாக்டர்.ரவிராஜ், டாக்டர்.இளங்கோ ஆகியோர் எமது தொழில்நுட்பவியலாளருக்குத் தேவை

கடந்த ஆண்டில்தான் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவைச் சேர்ந்த கால் பொருத்தும் நிபுணர் ஒருவரின் சேவையும் எமது ஸ்தாபனத்திற்குக் கிடைத்தது. பொலிபுறப்பைலீன் எனப்படும் ஒருவகைப் பிளாஸ்ரிக்கிலான காலை எமது ஜெய்ப்பூர் பாதத்துடன் இணைத்து ஒரு புதிய தொழில்நுட்பத்தை செயற்கைக் கால் தயாரிப்பில் புகுத்துவதே எமது கூட்டு முயற்சியாகும். இதற்கு ஏதுவான நவீன தொழில் நுட்பம் கொண்ட ஒரு புதிய தொழிற்பட்டறையை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அமைத்துள்ளது.


செயற்கைக் கால் நிபுணர் (f)பிறஸ், எமது தொழில் நுட்பவியலாளரின் உதவியுடன் ஆராய்ச்சிகள் பல செய்து உயர்வான செயற்கைக் கால் தாயாரிப்பில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளார். எமது செயற்கைக் கால் பாவனையாளரும் இப்புதிய தயாரிப்பினை நாடி வருகின்றார்கள். அதோடு கடந்த ஆண்டில் எமது பட்டறையின் முகாமையாளராகப் பதவி ஏற்ற மகேந்திரகுமாரின் ஆழ்ந்த தொழில்நுட்ப அறிவும் அனுபவமும் அவயவக் குறைபாடுள்ள பலரின் தனிநபர் தேவைக்கேற்ற பல புதிய தயாரிப்புகளை வடிவமைக்க உதவுகின்றது. அங்கவீனர் ஒருவரின் தேவைக்கேற்றவாறு முச்சக்கரவண்டியாக அல்லது சக்கரநாற்காலியாக பாவிக்க கூடிய ஓர் ஊர்தியை இவர் பரீட்சார்த்தமாகத் தயாரித்துள்ளார். இருவேறு பாவனை வசதிகளை உடையதாய் இத்தயாரிப்பு அமைவதோடு பொருளாதார ரீதியிலும் பாவனையாளருக்கு இலாபமாக அமையுமென நாம் எண்ணுகின்றோம்.

சாதனங்களையும் வழங்கியுள்ளோம். அதோடு 314 முச்சக்கர வண்டிகளையும், 84 சக்கர நாற்காலிகளையும், 17 நடைதாங்கிகளையும், 1011 ஊன்றுகோல்களையும் தயாரித்து அளித்துள்ளோம்.

அங்கப்பு[illegible]மைப்புச் செய்தவர்களை மீண்டும் தலை நிமிர்ந்து, தன்மானத்தோடு,சமூக நீரோட்டத்தில் கலந்து வாழ உதவுமுகமாக அவர்களது பொருளாதார நிலையை உயர்த்த வழி செய்தோம். முடிந்த போது அவர்களுக்கு தொழிற்பயிற்சியும், நிரந்தரமான தொழிலும் பெற்றுக் கொடுத்தோம். ஒரு நிரந்தர தொழிலில் ஈடுபட்டு தம் வருவாயை பெருக்கிக் கொள்ளக் கூடிய வகையில் அவர்களுக்கு சுழற்சி முறையில் வட்டி இல்லாக் கடன் கொடுத்து உதவினோம். இதன் பயனாக எமது அவயவப் பாவனையாளர்கள் 277 பேர் பயன் பெற்றுள்ளனர். செயற்கைக் கால் பொருத்திய - பள்ளிக்கூடம் செல்லும் - 46 சிறுவர்களுக்கு அவர்கள் தங்கள் கல்வியை இடைநிறுத்தா வண்ணம் மாதாந்த ஊக்குவிப்புப் பணம் கொடுத்து உதவுகின்றோம்.

அது மட்டுமன்றி யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மூலம் அவயவம் இழந்து தங்கியிருப்போருக்கு எமது நிறுவனத்தில் பணிபுரியும் புனர்வாழ்வு உத்தியோகத்தர் இருவரினால் உளவளத்துணையும், அவயவத் தாண்டப்பராமரிப்பு, அதற்குத் தேவையான பயிற்சி முறைகள் பற்றிய ஆலோசனை ஆகியவற்றையும் ஒவ்வொரு புதன்கிழமையும் அளிக்கப்படுகிறது. இவ்வாறாக உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்ட 1692 பேருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் உளவள உதவி வழங்கியுள்ளோம். எம் இயன் மருத்துவ சேவையினால் 718பேர் பயனைப் பெற்றுள்ளார்கள்.

யான அடிப்படை உடற்கூற்று அறிவை விரிவுரைகள் மூலம் வழங்கி வருகிறார்கள். யாழ். போதனா வைத்தியசாலை இயன் மருத்துவ துறையைச் சார்ந்த செல்லையா எமது புனர்வாழ்வு பணியாளருக்கு இயன் மருத்துவ பயிற்சிகளை அளித்து வருகின்றார். இவர்கள் எல்லோருக்கும் எமது ஸ்தாபனம் மிகவும் கடமைப்பட்டுள்ளது.



சக்கர நாற்காலி முச்சக்கர வண்டியாக.....

எமது சேவைகள் அனைத்தும் இடம்பெயர் நிலையிலும் எமை நாடி வருவோர்க்கு குறைவிலாது கிடைக்க வழி செய்துள்ளோம். வார நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பகல் 2.00 மணிவரை எமது காரியாலயமும் தொழிற்பட்டறைகளும் தற்காலிகமாக இயங்குகின்றன. தொலைதூரமான தொல்புரத்தில் நாம் இயங்கும் நிலை கருதி எமது சேவைகளை நாடி வருவோர்க்கு சிறிய அளவில் போக்குவரத்து வசதிகளையும் அளித்துள்ளோம். யுத்த கருமேகங்கள் கலையாதிருப்பின் நாம் எமது முன்னைய தொழில் ஸ்தானத்திற்கு திரும்புவது சாத்தியமல்ல என்றே நாம் கருதுகின்றோம்.

**திருமதி.தி.யோகநாதன்,**
(கௌரவ செயற்திட்டப் பணிப்பாளர்,
ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டம்,
யாழ்ப்பாணம்)

எமது மனிதாபிமானப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல பல வகையிலும் பலர் உதவியுள்ளார்கள். இவர்கள் எங்களுக்கு ஆற்றிய உதவி மறக்கற்பாலது. ஆயுத மோதல்களினால் கை கால் இழந்தோர்க்கு செயற்கை அவயவங்கள் பொருத்த யு.எஸ்.எய்ட் (U.S. AID) ஸ்தாபனம் கடந்த மூன்று ஆண்டுகளாக நிதி உதவி தந்து எமக்கு உதவி வருகின்றது. நடப்பாண்டிலும் அவர்கள் உதவி செய்ய உறுதி அளித்துள்ளனர். கை, கால் பொருத்தும் சேவையைத் தவிர்ந்த எமது ஏனைய சேவைகளுக்குப் பண உதவி

(11 ஆம் பக்கம் பார்க்க)

---

# ஆளும் தரப்பு பிரமுகர் பற்றிய தகவல் இது!

கொழும்பிலிருந்து புதிதாக வெளிவரத் தொடங்கியுள்ள 'ஆதவன்' தமிழ் வார சஞ்சிகையின் ஜூலை 9ஆம் திகதிய இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ள தகவல் இது. சிங்களத்தில் வெளிவரும் 'ராவய' வார இதழின் துணிவான கருத்துக்களை முன்வைத்து இந்தத் தமிழ் சஞ்சிகை கடந்த ஜூன் 18ஆம் திகதி முதல் வெளிவரத் தொடங்கியுள்ளது.

இன்றைய ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய ஆலோசகராகவும் 'ரூபவாஹினி' பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக் குழுவின் அங்கத்தவராகவும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் ஊடக கண்காணிப்பு குழு பிரதான ஆலோசகராகவும் ஊடகக் கவுன்ஸில் உறுப்பினராகவும் உள்ள சட்டத்தரணி ஸ்ரீபதி சூரியாராச்சியின் கடந்த பத்து வருடங்களுக்கு முந்திய 'பின்னணியை' கேள்விப்பட்டால் கொஞ்சம் அதிர்ச்சியானதாக இருக்கும்.

1990-1991ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். குடாநாட்டில் ஊர்காவற்றுறை மற்றும் தீவுப் பகுதிகளில் லெப்டினன்ட் எஸ்.கே.ஸ்ரீபதி எனக் கடற்படையில் சேவையாற்றி 1991இல் கடற்படை நீதிமன்றத்தால் தமிழ் மக்களின் வீடுகளை உடைத்து நகைகளைத் திருடியவர் என விசாரிக்கப்பட்டவரே இன்றைய ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆலோசகர் சட்டத்தரணி ஸ்ரீபதி சூரியாராய்ச்சி.

கடற்படையினரின் எந்தவித அனுமதியும் இன்றி தமிழ் மக்களின் வீடுகளை உடைத்து, நகைகளைத் திருடியது, இதற்கு உதவியாகக் கடற்படை வீரர்களை அழைத்துச் சென்றது, திருடிய நகைகளை வைத்திருந்தது ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்களின் பேரில் 1991 இல் கடற்படையின் நீதிமன்றத்தால் இவர் விசாரிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

குண்டுவெடிப்பில் பலியான ரியர் அட்மிரல் மொஹான் ஜயமகா, வைஸ் அட்மிரல் சிசில் திசேரா (முன்னாள் விமானப் படைத் தளபதி), ரியர் அட்மிரல் விஜயவிக்ரம (கடற்படை திட்டப் பணிப்பாளர்) ஆகியோர் இதை விசாரித்தனர். தற்பொழுது கொழும்பு நீதிபதியாக உள்ள ராஜபெர்ணான்டோ அப்போது சட்ட ஆலோசகராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச சட்டத்தரணியாக இருந்த கப்டன் பாலித பெர்ணான்டோ இந்தக் குற்றங்களை இவர் மீது சுமத்தினார். இப்போது மேல் மாகாண கடற்படைத் தளபதியான ஏ.எச்.எம். அருக், கப்டன் பி.ராஜரட்ண ஆகியோர் சாட்சியளித்தனர்.

அண்மையில் லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவராக இருந்து ராஜினாமா செய்த அலோய் ரட்ணாயக்கவே ஸ்ரீபதிக்காக அன்று ஆஜராகி வாதாடியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொடர்பு சாதன அமைச்சரின் நெருங்கிய சகாவும் இன்றைய ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆலோசகராகவும் இருப்பவர்களின் கடந்த காலப் பின்னணி இவ்வாறெனில் எவ்வாறு இனப்பிரச்சினைக்கும் தமிழ் மக்களுக்கும் நீதியான தீர்வு கிடைக்கும்?




'ஆதவன்' இதழில் வெளியான கார்ட்டூன்களில் ஒன்று

## றொனிக்கு தரப்பட்ட கால அவகாசம் நீடிப்பு

அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் ஐ.தே.கவின் முடிவுக்கு எதிராகச் செயற்பட்டமைக்கான விளக்கத்தை அளிப்பதற்காக மாத்தறை மாவட்ட ஐ.தே.க. உறுப்பினர் 'றொனி' டி மெல்லுக்கு வழங்கப்பட்டிருந்த காலக்கெடுவை ஐ.தே.க நீடித்துள்ளது.

கடந்த10 ஆம் திகதிக்கு முன்னர் இந்த விளக்கத்தை அனுப்புமாறு ஐ.தே.க அவரிடம் கேட்டிருந்தது.

விளக்கம் அளிப்பதற்குக் கால அவகாசம் போதாது என்று அவர் தெரிவித்ததை அடுத்து எதிர்வரும் 31ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

(இ-க-3)

# இந்திய வம்சாவளி மக்களின் பிரஜாவுரிமையை உறுதி செய்க!

## இ.தொ.கா. அதிருப்திக்குழு கோரிக்கை

கொழும்பு,ஜூலை16

அரசாங்கம் முன்வைத்துள்ள புதிய அரசமைப்பில் இந்திய வம்சாவழி மக்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதை உறுதி செய்யவேண்டும்.

இ.தொ.காவின் அதிருப்திக்குழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

கட்சித் தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் தலைமைத்துவத்தில் அதிருப்தி கொண்டுள்ள இக்குழுவினர் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்தனர். இக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பி.பி.தேவராஜ், ஏ.எம்.ரி. ராஜன், எஸ்.சதாசிவம் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

அண்மையில் வழங்கப்பட்ட சம்பள உயர்வுத் திட்டத்தினால் அதிருப்தி அடைந்துள்ள தோட்டத் தொழிலாளர்களைத் திருப்திப்படுத்தும் விதத்தில் அவர்களின் சம்பளத்தை மீளாய்வு செய்ய சம்பளக் கமிஷன் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்றும் -

மலையகத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பும்போது இந்திய வம்சாவழியினருக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்றும் -

தூதுக்குழுவினர் கோரிக்கை விடுத்தனர்.

இந்த மூன்று விடயங்களையும் கவனத்தில் எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார் என்று தூதுக்குழுவினர் தெரிவித்தனர். (உ-3)


## 50 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

**திரு. சின்னத்தம்பி யோகராசா**
(மிதிலா அழகுமாடம் - ஆவரங்கால்)

பொன்விழாவின் பொலிவு மிகு
நன்னாளாம் இந்நாளில்
புதல்வியர் நம் பூரிப்பு உள்ளங்களில்
புஷ்பமாக மலர்ந்த எம் தந்தையை
பொன்பிறந்த நாளில் உளமார
நல் வாழ்த்து வாழ்த்தும்

புதல்வியர்கள்
மைதிலி, அகல்யா, மிதிலா.

மணற்பகுதி,
புத்தூர். (76426)



## வாழ்த்துகின்றோம்

நாடகத்துறை சார்ந்த கலைச் சேவைக்காக
இலங்கை கலாசார அலுவல்கள் அமைச்சினால்
'கலாபூஷணம்'
விருது பெற்றுக் கௌரவிக்கப்பட்ட
திரு. வே.க.பாலசிங்கம் அவர்களை
மனமார வாழ்த்துகின்றோம்.

பரிபாலன சபை,
சாமணந்தறை ஆலடிப்
பிள்ளையார் கோயில்.

அல்வாய் (76414)



## மூன்றாம் வருட பொதுக்கலை மாணவர்களுக்கான கலந்துரையாடல்

மூன்றாம் வருட பொதுக்கலை மாணவர்களுக்கான பரீட்சை தொடர்பான அவசரக் கலந்துரையாடல் நாளை 17-07-2000 (திங்கள்) காலை 11.00 மணியளவில் இடம் பெறவுள்ளதால், அனைத்து 3 ஆம் வருட பொதுக்கலை மாணவர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பொதுக் கலை மாணவ பிரதிநிதி.
யாழ். பல்கலைக்கழகம்.

(76495)



## KARATE

**SHOTOKAN KARATE ACADEMY**
**(I.U.M.A & U.T.K.F)**

மீண்டும் யாழ். நகரில் வழமையான இடத்தில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன என்பதை மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

Instructor D. ANTODINES H (M.T.SK)
(Black Belt 2 nd Dan-Intl)

(76415)



## ரஷ்யாவில் உயர்கல்வி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற மொஸ்கோ, லுமும்பா போன்ற ரஷ்யப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில அனுமதி பெற்றுத் தரப்படும்.

1. மருத்துவம் (ஆங்கிலம்)
2. பொறியியல் (ஆங்கிலம்)
3. கணனியியல் (ஆங்கிலம்)
4. ஏனைய துறைகள் - பொருளாதாரம் போன்றவை.

மேலதிக விவரங்களுக்கு உடனே தொடர்பு கொள்ளவும்.

Dr. க.சிவனடியான்
நவாலி, மானிப்பாய்.

(76409)


## தடுத்துவைக்கப்பட்டுள்ள

# மொறட்டுவைப் பல்கலை. மாணவனை பார்க்கச் சென்ற வயோதிபர் கைது

கொழும்பு,ஜூலை16

வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்தப்பட்டு தற்சமயம் புலனாய்வுப் பிரிவின் நாலாவது மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் மாணவனைப் பார்க்கச் சென்ற வயோதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மாநகரசபை நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற - மன்னார் நானாட்டானைச் சேர்ந்த - எல்.எக்ஸ்.ஆர்.ஜோன் பிள்ளை (வயது74) என்பவரே கைது செய்யப்பட்டுத் தடுத்துவை[illegible]பட்டுள்ளவராவார்.

இவரது கைது தொடர்பாக இவரது மகளான தயாளினி ஜோன் பிள்ளை மன்னாரில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

## நல்லூர் பாலகதிர்காம ஆலய ஆடிவேல் விழா

நல்லூர்,ஜூலை16

நல்லூர் ஸ்ரீபாலகதிர்காம ஆலயத்தின் ஆடிவேல் விழா எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமைவரை மூன்று தினங்கள் பக்தி பூர்வமாகக் கொண்டாடப்படும்.

புதன்கிழமை காலை 8 மணிக்கு மேற்படி ஆலயத்தில் இருந்து புறப்படும் வேல்ரதப்பவனி பருத்தித்துறை வீதி வழியாக காலை 11 மணிக்கு வீரமாகாளி அம்மன் ஆலயத்தைச் சென்றடையும்.

அங்கிருந்து நண்பகல் 12 மணிக்குப் புறப்படும் வேல்ரதம் யாழ்.நகர வீதிகளினூடாக பிற்பகல் 5மணிக்கு வண்ணார்பண்ணை சிவன் கோயிலைச் சென்றடையும்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டுக் காங்கேசன்துறை வீதி வழியாக காலை 11 மணிக்கு வண்ணை நாச்சிமார் அம்மன் ஆலயத்தைச் சேர்ந்து பிற்பகல் 3 மணிக்குப் புறப்பட்டு பிற்பகல் 5 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தைச் சேரும்.

இறுதி நாளான வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு புறப்படும் ரதம் திருநெல்வேலி வீதி வழியாக அரசடி சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தை நண்பகல் 12 மணிக்கு சென்றடையும். பிற்பகல் 3 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கல்வியங்காடு ஊடாக பிற்பகல் 5 மணிக்கு மீண்டும் ரதம் பாலகதிர்காமம் ஆலயத்திற்கு வந்துசேரும்.

குறித்த நேரத்தில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஜ-111)

## மூத்த கலைஞர்கள் கௌரவிப்பு

நெடுந்தீவு,ஜூலை16

நெடுந்தீவில் மூத்த கலைஞர்களைக் கௌரவிக்கும் விழா இன்று இடம்பெறுகின்றது. நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் கலாசார சபையின் சார்பில் நடைபெறும் இந்த விழாவில் மிருதங்கம், நாட்டுக்கூத்து, சிற்பக் கலைகளில் அனுபவம் பெற்ற மூத்த கலைஞர்கள் பொன்னாடை போர்த்து பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்படுகிறார்கள்.

இன்றைய விழாவில் கௌரவம் பெறும் கலைஞர்கள் வருமாறு:-

சின்னவன் நாகேந்திரம் (மிருதங்கம்), மரியான் சவிரிமுத்து (நாட்டுக்கூத்து), வேலுப்பிள்ளை மதியாபரணம் (சிற்பம்), கிறித்தோ இன்னாசிமுத்து (நாட்டுக் கூத்து), அந்தோனி வலத்தீஸ் (நாட்டுக்கூத்து), சைமன் ஜேசுதாசன் (நாட்டுக்கூத்து), சவிரி மிக்கேல் (நாட்டுக்கூத்து), இராயப்பு மோசெஸ் (நாட்டுக்கூத்து), சந்திகா தேவசகாயம் (நாட்டுக்கூத்து), வெலிச்சோர் பெனாண்டஸ் (சிற்பம்), யாக்கோப்பு அடைக்கலமுத்து (நாட்டுக்கூத்து).

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக கல்வி வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் மேலும் பலர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (க-111)


## SHAMROCK

எமது வகுப்புக்கள் யாவும்
தற்காலிகமாக
இல. 29/3,
சோமசுந்தரம் அவன்யூ
(றெயில் பாதை அருகில்)
இன்று தொடக்கம்
நடைபெறும்.

* எமது ஆசிரியர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி

(76412)


# பல்கலைக்கழக சீர்திருத்தத்துக்கு புதிய சட்டமூலம் தயாரிப்பு

கொழும்பு,ஜூலை16

தேசிய கல்வி ஆணைக்குழுவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் இணைந்து புதிய பல்கலைக்கழகச் சட்டமூலம் ஒன்றை உருவாக்கியுள்ளன.

இந்தச் சட்டமூலம் பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றே உருவாக்கப்பட்டுள்ளதாகவும் -

மேலதிக சீரமைப்பு செய்வதற்காக சட்டமூலத்தின் பிரதிகள் சகல பல்கலைக்கழக உத்தியோகத்தர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் -

கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.சி.குணவர்த்தனா தெரிவித்தார்.

ஆலோசனைகளை அடுத்த மாதம் 6ஆம் திகதிக்கு முன அனுப்பி வைக்குமாறும் -

அதன் அடிப்படையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அரசாங்கத்திடம் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும் என்றும் -

- தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விசேட அம்சங்கள் வருமாறு:-

★ பல்கலைக்கழகத்தின் சுயாதீனத்தையும் கல்விச் சுதந்திரத்தையும் பலப்படுத்துதல்.

★ பல்கலைக்கழகங்கள் ஆலோசனை சேவை நிலையங்களையும் தொழில் வழிகாட்டு நிலையங்களையும் நிறுவுதல்.

★ சகல பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவான கல்வி ஆண்டை அறிமுகப்படுத்துதல்.

★ பல்கலைக்கழகப் பேரவை பல்கலைக்கழக மூதவை ஆகியவற்றின் அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு பேரவை பல்கலைக்கழக வேந்தரைத் தெரிவுசெய்தல்.

(இ-9)

# தேர்தலில் கூடிய பெண்களுக்கு இடம் அளிக்கக் கோரிக்கை

கொழும்பு,ஜூலை16

"பொதுத் தேர்தலில் போட்டியிடப் பெண்களுக்குக் கூடுதல் இடம் அளிக்கப்படவேண்டும். அதன் மூலம் வன்செயல்கள் குறையும்"

இப்படி மகளிர் விவகார அமைச்சர் ஹேமா ரட்ணாயக்கா கருத்துத் தெரிவித்துள்ளார்.

அரசியல் தலைவர்களுக்கு விடுத்துள்ள செய்தியிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மேலைநாடுகளில் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்து வருகின்றது. ஆனால் இலங்கையில் அரசியல் துறையில் பெண்கள் ஈடுபடுவதைக் கட்சித்தலைவர்கள்தான் தடுத்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் பெண்களைத் தலைமைப் பொறுப்புக்களில் நியமித்ததன் மூலம் முன் உதாரணங்களாக விளங்குகின்றன.

தற்போதைய நாடாளுமன்றத்தில் பதினொரு பெண்கள் மட்டுமே உறுப்பினர்களாக உள்ளனர். இது மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 4.9 சதவீதமாகும் - இப்படி அவர் கூறினார்.


## கணேசன் வைத்திய நிலையம்

கைதடி விக்கினேஸ்வர வித்தியாசாலைக்கு முன்பாக இயங்கிவந்த வைத்திய நிலையம் தற்போது 'ஸ்கந்த வில்லா' (SKANDAVILLA) 225, கே.கே.எஸ். வீதி, (ஜெட் மோட்டோஸ் சந்திக்கு அருகில்) சுன்னாகத்தில் இயங்கி வருகின்றதென்பதை அறியத்தருகின்றேன்.

Dr. V.கணேசலிங்கம்
(R.M.P.)

(76404)



## தேடுகின்றோம்

சின்னையா இராஜேஸ்வரி, சிவறஜீவ், ஜெயகாந்தன், லக்ஸ்மன் ஆகியோரை அவர்களது தந்தையார் தேடுகின்றார்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ரவிதாஸ்ரோஸ்
375, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(T.P. No - 3221) (76418)



## அறிவித்தல்

தென்மராட்சிப் பகுதியின் முன்னாள்
விவாகப் பதிவுகாரரான
திரு. சுப்பிரமணியம் அருட்சோதி
அவர்களின் தாயாரை
சாவகச்சேரி சோலை அம்மன் ஆலய பிரதம குருக்கள்
தேடுகின்றார்.
உடன் தொடர்பு கொள்ளவும்.

சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள்
வழக்கம்பரை மஹாமாரி அம்பாள் ஆலயம்,
தொல்புரம், சுழிபுரம்.

(C/12229)

# எட்டு எம்.பிக்களுக்கு எதிராக ரகசியப் பொலீஸ் விசாரணை

## பணம் பெற்று பலரை வெளிநாடு கூட்டிச் சென்றனராம்

கொழும்பு, ஜூலை 16
வெளிநாடுகளுக்குப்பலரைக் கூட்டிச் சென்றதாகவும் இதற்காக அவர்களிடமிருந்து சட்ட விரோதமாகப் பெருமளவு பணத்தைப் பெற்றதாகவும் கூறப்படும் எட்டு எம். பிக்களுக்கு எதிராக ரகசியப் பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று 'லக்பிம' சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

குறித்த எம் பிக்கள் தொடர்பாகவிசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி விடுத்த உத்தரவுக்கு இணங்கவே ரகசியப் பொலீஸார் இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவர்களில் ஐவர் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனவும் மூவர் ஐ.தே. கட்சியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த இந்த ஐவரில் இருவர் பிரதி அமைச்சர்கள் எனவும் அரச வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. ஐ.தே. கட்சியைச் சேர்ந்த எம்.பிக்கள் தொடர்பான விவரங்களை ஜனாதிபதி சந்திரிகா ஏற்கனவே ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த 5 எம்.பிக்களின் பெயர்களை வெளியிடுமாறு அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த ஒரு பிரிவினர் ஜனாதிபதியிடம் கோரியதாகவும்-

ஆனால் இவ்விடயம்குறித்து ரகசியப் பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதால் விசாரணைகளின் முடிவில் அவர்களின் பெயர் விவரங்கள் வெளிவரும் என ஜனாதிபதி பதிலளித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த குறித்த ஐந்து எம். பிக்களுடன் எதிர்வரும் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தப்படமாட்டார்கள் எனவும் அத்துடன் அவர்கள் மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

(இ-2)

## சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உபகரணங்கள்

### சாரதா சேவாச்சிரமம் வழங்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 16
சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகள் அனைவருக்கும் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமம் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களை வழங்கவுள்ளது.

இந்த உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை கரவெட்டியில் தற்போது பாடசாலை இயங்கும் இடத்தில் நடைபெறும்.

தென்மராட்சி கல்விப் பணிப்பாளர் வே. செல்வராசா இந்த உபகரணங்களை வழங்குவார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிசன் இலங்கைக் கிளையின் தலைவர் தவத்திரு சுவாமி ஆத்மகணானந்தர் மகராஜ் அனுப்பிய நன்கொடையில் இருந்து இப்பொருள்கள் வழங்கப்படுகின்றன.

(ஐ-15-10)


## 31-ம்நாள் நினைவுக்காணிக்கை



தோற்றம் 13 — 09 — 1938

மறைவு 15 — 06 — 2000

### என். வி. இராமன்

(இந்திரா ஸ்ரோர்ஸ், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்)

ஒளி ஒன்று மறைந்து எம் மனையெலாம் இருள் சூழ்ந்தது
எம் குடும்பத்தின் தலைவன் எம் இதயத்தின் தெய்வம்!
எம் எல்லோரையும் வாழ வைத்த தெய்வம்!
எங்கு சென்று மறைந்தது? எப்படி நாம் தாங்குவோம்
வியாபாரத்தில் தர்மமும் நேர்மையும் தளைத்திட
பொருள்வளம்தேடி புகழுடன் வாழ்ந்து
அனைவரையும் பண்புடன் பேணிநடந்த செம்மல்
அவர்தம் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவரை வேண்டுகிறோம்.

திரு. திருமதி நாராயணசாமி சீதாலட்சுமி,
மகள்: விக்கினேஸ்வரி.

84/5, தபால்கந்தோர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (76481)

## மரண அறிவித்தல்

### கைலாசபிள்ளை பாலசிங்கம்

(மலேசியா)

மலேசியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட கைலாசபிள்ளை பாலசிங்கம் 07-07-2000 அன்று மலேசியாவில் அகால மரணமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் (மலேசியா) அன்புக் கணவரும், மாலா, சுமி, குமார் (மலேசியா) ஆகியோரின் தகப்பனாரும் சுப்பிரமணியம் (மலேசியா), சதாசிவம், சரஸ்வதி, இந்திராணி, சிவராசா, மகாலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
சி. சதாசிவம்
மைத்துனர்
131, கண்டி வீதி,
அரியாலை.

தற்போதைய முகவரி:
சேச் லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(76413)


# விகிதாசார முறைப்படியே நாடாளுமன்றத் தேர்தல்...

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 16
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை விகிதாசார முறைப்படியே நடத்த முடியும். தொகுதிவாரியாக நடத்த முடியாது என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசமைப்பில் அறிமுகம் செய்யவுள்ள சுதந்திரத் தேர்தல ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி தொகுதிவாரியாக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுப்பதாக வெளிவந்த செய்திகள் குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

உத்தேச தொகுதிவாரியான தேர்தல் முறைப்படி தேர்தலை நடத்தக் கால அவகாசம் போதாது. விகிதாசார முறைப்படி தேர்தலை நடத்தத் தேவையான வசதிகளே தற்சமயம் உள்ளது.

கடந்த காலங்களில் நடத்தப்பட்ட மாதிரி விகிதாசார முறைப்படியே இம்முறை தேர்தலை நடத்த முடியும்—என்றார் அவர்.

(இ-3)

## சமய சந்நிதிகளில்

சண்டிலிப்பாய், ஜூலை 16
சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இம்மாதம் 25 ஆம் திகதியன்று திருப்பலிபூசை, திருச்செருப பவனி என்பனவற்றுடன் உற்சவம் முடிவடையும்.

சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு ரெஜி இராஜேஸ்வரன் அடிகளார் பூசைகளை நிறைவேற்றுவார். (ஐ-135)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை 16
தெல்லிப்பழை ஸ்ரீ காசி விநாயகர் ஆலய வருடாந்த நவோத்தர சகஸ்ர கும்பாபிஷேகம் நாளை மறுதினம் செவ்வாய் காலை 7.45 மணிக்கு நடைபெறும்.

(க-30)

★ ★ ★

வேலணை, ஜூலை 16
வேலணை தெற்கு தாளையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய ஆடிவேல் விழா நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். அன்றைய தினம் சங்காபிஷேகமும் இடம் பெறும். மறுநாள் செவ்வாய்க்கிழமை தீமிதித்தல் நிகழ்வு இடம் பெற்று முருகப்பெருமான் முத்துச் சப்பறத்தில் வீதி உலா வருவார்.

(க-167)

## மாணவருக்கு கலந்துரையாடல்

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வலிகாமத்துக்கு வந்திருக்கும் மாணவர்களில் தொண்டமனாறு வெளிக்கள நிலையப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் உடுவில் மகளிர் கல்லூரியில் மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்களை ஆதாரமாகக் கொண்டு கலந்துரையாடல் நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் சகலரையும் அன்றைய தினம்உடுவில்மகளிர் கல்லூரிக்குவருகை தருமாறு தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் இலங்கையர்கணேசன் அறிவித்துள்ளார். (ஜ-152)

# சேதமடைந்த லொறிகளைத் திருத்த ப.நோ.கூ.சங்கங்கள் நிதிகேட்கின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 16
படையினரின் பாவனைக்குப் பயன்படுத்தப்பட்டு சேதமடைந்துள்ள ப. நோ. கூ. சங்க லொறிகளைத் திருத்துவதற்கான நிதியைப் பெற்றுத் தருமாறு ப. நோ. கூ. சங்கங்களின் பிரதிநிதிகள் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து ப. நோ. கூ. சங்கங்களின் லொறிகள் படையினரின் பாவனைக்கு என எடுத்துச் செல்லப்பட்டன.

இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட லொறிகள் மீண்டும் ப. நோ. கூ. சங்கங்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ள போதிலும் அவை சேதமடைந்த நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த லொறிகளைத் திருத்தம் செய்வதற்கு ப. நோ. கூ. சங்கங்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபா செலவு ஏற்பட்டுள்ளது என்றும்—இந்தச் செலவு தொகையைப் பெற்றுத் தருமாறும் — ப.நோ.கூ. சங்கங்கள் கோரியுள்ளது.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அரச அதிபர் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஊடாக தெற்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

(இ-5-௨)

## திருமுறைப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 16
அகில இலங்கை திருமுறை மன்றம் நடத்தும் திருமுறைப் பெருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணி முதல் திருநெல்வேலி கிழக்கு வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும்.

காலை6மணிக்கு அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன இடம் பெறும். இந்த நிகழ்வில் செல்வன் கஜானனன் ரஞ்சன் கௌரவிக்கப்படுவார்.

(க-167)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 16
ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கலை,வர்த்தக மாணவர் மன்றம் நடத்தும் ஜீ. சி. ஈ. உயர்தரம் 2000 கலை. வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான சிறப்புக் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை தொடக்கம் 22 ஆம் திகதி வரை கல்லூரியின் டாக்டர் சுப்பிரமணியம் மண்டபத்தில் காலை 9.30 மணி முதல் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் புலமை மிக்க ஆசிரியர்கள் கருத்துரை வழங்குவர். (இ)

## குடும்ப அட்டைகள் மீளாய்வு

வலிகாமம் தெற்கு, ஜூலை 16
தென்மராட்சி, மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் இருந்துஇடம்பெயர்ந்து வந்து வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ளவர்களின் குடும்ப அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு முன் இடம் பெயர்ந்த மக்கள் தாம்வாழும் பகுதி கிராம சேவையாளர்களிடம் தமது குடும்ப அட்டையைக்காட்டி மீளாய்வு செய்து கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(ஐ-152)

## தங்குமடம் அமைக்க நிதி

வேலணை, ஜூலை 16
குறிகட்டுவான் இறங்கு துறைப் பகுதியில் பயணிகள் தங்குமடம் ஒன்றினை அமைப்பதற்கென வடமாகாண மீள் குடியேற்ற புனர்வாழ்வு அதிகாரசபையினால் சுமார் 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினாலேயே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் —

அடுத்த வருடம் நடைபெற உள்ள நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத் திருவிழாவுக்கு முன்னர் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டு விடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-167)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தமிழ் தட்டச்சு இயந்திரம், ரியூட்டறிக்குரிய வாங்கு மேசைகள், அரியப்பட்ட தென்னம் பலகைகள் உடன் விற்பனைக்கு உண்டு. (தினமும் மாலை 3-6 மணி வரை) தொடர்புகளுக்கு: அ. ராகவன், 3 ஆம் கட்டை, கல்வியங்காடு.
(76464)

சிறந்த நிலையிலுள்ள வான்கோழிகள், ஜமுனாபாரி கடா என்பன மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: இல. 75, செட்டித் தெரு, நல்லூர்.
(76498)

Funai- டெக், Hero சைக்கிள், National - றேடியோ விற்பனைக்கு உண்டு. "மோகன்ஸ்", மக்கள் வங்கி முன்பாக, நெல்லியடி.
(சி/12228)

எம்மிடம் பாவனையிலுள்ள மோட்டார் சைக்கிள் (Kawasaki- GTO -110), T v (Sony - 2060), டெக் (LG புதியது), Amplifier (TOA- 50 w) Box, Organ (yamaha -PSR 620) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 32, கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை.
(76419)

## தேவை

மிருதங்கம் கட்டும் உதவியாளர் தேவை. மேலதிக விபரங்களுக்கு: கே. விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.
(76499)

## திருமண சேவை

யாழ். கிறிஸ்தவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமக்கள் முழு விபரத்துடன் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உண்டு. திருப்தியான, துரிதமான சேவையை நீங்கள் நாடவேண்டிய முகவரி: கு. திருவிளங்கம், வாசிகசாலை ஒழுங்கை, 3 ஆம் கட்டையடி, கல்வியங்காடு.
(76496)

## தவறிவிட்டது

இணுவில் மேற்கு, இணுவிலைச் சேர்ந்த பொன்னர் நல்லையா என்பவருடைய தேசிய அ. அ. (இலக்கம் 301011881V) விசேட அ. அ. என்பன 10-07 2000 அன்று மருதனார்மடச் சந்தைக்கும் இணுவில் சந்தைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
(76416)

## இறைச்சிக் கோழிகள்

சேவல், கல்பேட், விறாத்துக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (76161)

## வீடு தேவை

நல்லூர்ப் பகுதி அல்லது யாழ். நகர் வடமேற்குப் பகுதியில் அமையப் பெற்ற நல்ல நிலையிலுள்ள சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்குத் தேவை. நியாயமான வாடகை, விற்பனை குறித்த விவரங்களுடன் தொடர்புகளுக்கு: விள. இல. 1058, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி/12203)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 27 வயது, 4 செவ்வாய், உத்தரம் நட்சத்திரம் உடைய ஆயுள்வேதம் சித்தி அடைந்த மணமகளுக்கு கல்வித் திறமையுள்ள மணமகன் தேவை. உள்நாடு or வெளிநாடு எதுவாயினும் விரும்பத்தக்கது. தொடர்பு: செ. விஜயரத்தினம் நவாலி கிழக்கு, மானிப்பாய். (76494)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சமாச நிர்வாக சபை உறுப்பினர்

## அமரர் ஆழ்வாப்பிள்ளை சிற்சபேசன்

(ஓய்வு பெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

வலி. தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசம்

பிரதேச சபை,
சுன்னாகம். (76487)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது கல்வி நிறுவனத்தின் சிரேஷ்ட ஆசிரியர்

திரு. விவேகானந்தன்

அவர்களின் அருமை மைத்துனர்

## அமரர் ஆ. குமரகுரு

(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்களின் ஆத்ம சாந்திக்காக இந்நாளில் பிரார்த்திக்கின்றோம்.

குகன் கல்வி நிறுவனம்

ஆவரங்கால். (76492)

---

# மீண்டும் யாழ். நகரில்

## குமாரன் தங்கும் விடுதி

வழமை போல் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்

67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன் நம்பர்: 2201 (76424)

---

# கண்ணீர் அஞ்சலி

சித்தன்கேணியைச் சேர்ந்த இப்பிரிவின் நீண்டகால நிர்வாகசபை உறுப்பினர்

திரு. சி. ஸ்கந்தமயம்

அவர்களின் அன்புத் தந்தையாரான

## அமரர் திருவம்பலம் சிவமயம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
வலி. மேற்குப் பிரிவு

மாவடி,
வட்டுக்கோட்டை. (76420)

---

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 — 04 — 1955

மறைவு 16 — 07 — 1996

## திருமதி மீனாம்பிகை பாக்கியநாதன்

(சட்டத்தரணியும் சட்டமாணியும் பிரசித்த நொத்தாரிசும் சத்திய ஆணையாளரும்)

விண் தொட்ட காலம் நான்காண்டு சென்றாலும்
மண் விட்டு நீர்தான் மறைந்து போனாலும்
மனம் விட்டு உம் நினைவு மாறாது மறையாது
அம்மாவே! நீங்காத நினைவோடு இம்மண்ணில்
வாழ்கின்றோம்.

உம் நினைவில் வாழும்
கணவன், பிள்ளைகள்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை. (76400)

---

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாண வலயம்.

இதன் கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள், யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளரும், யாழ். வலயக் கல்வித்திணைக்கள கேள்விச் சபைத்தலைவருமாகிய என்னால் 2000 - 07 - 28 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே மு. ப. 10 30 மணிக்குத் திறக்கப்படும் அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல. | பாடசாலை பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் |
|---|---|---|---|
| 01. | செயற்பாட்டறை அமைத்தல் 40'X25' யா/அச்சுவேலி ம. வி. | 500/- | 13,000/- |
| 02. | விவசாய அறைத்தொகுதி அமைத்தல் யா/அச்சுவேலி ம. வி. | 250/- | 1,800/- |
| 03. | யா/யாழ். மத்திய கல்லூரி (தேசியக்கல்லூரி) 03 மாடிக் கட்டடம், அமைத்தல் 90'X25' (முதலாம் மாடியில் எஞ்சிய வேலை) | 500/- | 11,000/- |
| 04. | யா/யாழ். மத்திய கல்லூரி 03 மாடிக் கட்டடம் அமைத்தல் 55'X25' (முதலாம் மாடியில் எஞ்சிய வேலை) | 500/- | 4,600/- |

01. மேற்படி வேலைகளுக்கு முதலாம், மூன்றாம் இலக்க வேலைகளுக்கு இக்ராட் (ஐசீரிஏடி) நிறுவனத்தின் தரம் எம் 08-ம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும்; இரண்டாம், நான்காம் இலக்க வேலைகளுக்குத் தரம் எம்9-ம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.
02. கேள்விப் பத்திரங்களில், பொருள்கள் சேவை வரி (ஜீ. எஸ். ரி) சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை; பொருள்கள் சேவை வரி (ஜீ எஸ். ரி) சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
03. வேலைகளுக்கு அமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப் பணத்தை யாழ்ப்பாண வலயக் கல்வித்திணைக்களத்தில் வலயக் கல்விப்பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து கேள்விப்பத்திரங்களை 2000 - 07 - 17 ஆம் திகதியிலிருந்து 2000 - 07 - 21 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை யாழ். வலயக்கல்வித் திணைக்களப் பாடசாலைக் கட்டட வேலைகள் கிளையிற் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப் பிரதியும் இணைப்பிரதியும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டுக் கடித உறைகளின் இடதுபுற மேற்பக்கத்தில் வேலையின் விபரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடிதஉறையில் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரின் முத்திரை இடப்பட்டு "தலைவர், கேள்விச்சபை, யாழ். வலயக் கல்வித்திணைக்களம், செம்மணி வீதி, யாழ்ப்பாணம்". என விலாசமிடப்பட்டு யாழ் வலயக் கல்விப்பணிப்பாளரின் அலுவலக அறையினுள் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் 2000-07-28 ஆம் திகதி மு ப. 10 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக் காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
05. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர், தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 04 மாதகாலத்திற்குள் வேலைகளை பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலைக் கட்டட வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறியத்தருகின்றேன்.

திருமதி செ. மகாலிங்கம்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பாடசாலைகள் கட்டட வேலைகள் கிளை,
வலயக்கல்வித் திணைக்களம்,
செம்மணி வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம். 14 - 07 - 2000

(சி/12218)

# துறைமுகத்தில் இருந்து கொள்கலன்களை வெளியேற்ற 200 கோடி ரூபா லஞ்சம்?

## பூரண விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,ஜூலை16

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து அண்மையில் 44 கொள்கலன்கள் வெளியேற்றப்பட்ட சம்பவத்தில் பெரும் ஊழல் இடம்பெற்றிருப்பதாக கொழும்பில் வெளியாகும் 'ஆதவன்' வாரப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கொழும்புத் துறைமுகத்திலிருந்து அண்மையில் 44 கொள்கலன்கள் வெளியேற்றப்பட்ட சம்பவத்துக்கு 200 கோடி ரூபா பெறப்பட்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பூரண விசாரணை ஒன்றுக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க உத்தரவிட்டுள்ள போதும் இதற்குப் பொறுப்பான துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரான எம்.எச்.எம்.அஷ்ரப்பின் மௌனம் எதை வெளிக்காட்டுகின்றதென்பதை உணர முடியாமலுள்ளது.

இந்த 44 கொள்கலன்கள் கொழும்புத் துறைமுகத்திலிருந்து வெளியேற்றப்பட்டு மோசடி இடம்பெற்றதற்குப் பின்னர் அமைச்சர் அஷ்ரப்புக்கும் அதிகாரமிக்க அரச உயர் மட்டத்தினருக்குமிடையே கசப்பான வெளிப்பாடுகளே எழுந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இச்சம்பவத்துக்குப் பின்னர் அமைச்சர் அஷ்ரப் அங்கம் வகிக்கும் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியினாலேயே முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த தென்கிழக்கு அலகு யோசனை நிராகரிக்கப்பட்ட பின்னரும் கூட, அது தொடர்பாக அமைச்சர் அஷ்ரப்பால் ஆவேசம் கொள்ள முடியவில்லை என்றும் முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து 44 கொள்கலன்கள் வெளியேற்றப்பட்டது தொடர்பாக நீதியான விசாரணையொன்று நடத்தப்பட்டால் அதிர்ச்சியூட்டக் கூடிய மாற்றங்கள் அரசியலில் நிகழலாம் என்றும் சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை -

அமைச்சர் அஷ்ரப்பினால் புனர்வாழ்வு அமைச்சிலிருந்து பெறப்பட்ட கோடிக்கணக்கான ரூபாவைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தேசிய ஐக்கிய முன்னணி தற்போது கலைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

தேசிய ஐக்கிய முன்னணி ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் தொலைக்காட்சி விளம்பரங்களுக்கு மட்டும் ஒரு நாளைக்கு மூன்றரை லட்சம் ரூபாவரை செலவழிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதையெல்லாம்விட 45 ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்ட புத்தளம் நகரசபைத் தலைவர் பாயிஸுக்கெதிராக நடவடிக்கையெடுக்காமை, இஸ்ரேலின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்காமை, உட்கட்சி முரண்பாடுகள், துறைமுகத்திலிருந்து 44 கொள்கலன்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டு உட்பட பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் அமைச்சர் அஷ்ரப் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதைவிட எதிர்வரும் பொதுத் தேர்தலில் பிரதியமைச்சர் அபூபக்கர், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இல்யாஸ் ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிடமாட்டார்களென்றும் தெரியவருகிறது. (ஐ)

# கொழும்பு பாடசாலைகளில் பாதுகாப்புக் குழுக்கள்!

கொழும்பு,ஜூலை16

கொழும்பு நகரின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு பாடசாலை மட்டத்தில் மாணவர் பாதுகாப்புக்குழுக்களை அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

கொழும்பில் உள்ள சகல பாடசாலைகளிலும் இத்தகைய பாதுகாப்புக் குழுக்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ள பொருள்கள் மற்றும் நபர்கள் தொடர்பாகவும் மாணவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன.

மாணவர்களினதும் பாடசாலைச் சுற்று வட்டாரங்களினதும் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டும் பொலீஸார் மற்றும் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாகவுமே இத்தகைய மாணவர் குழுக்கள் அமைக்கப்பட்டுவருவதாக கொழும்புப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கொட்டாஞ்சேனைப் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளின் மாணவர் பாதுகாப்புக்குழு உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு ஒன்று கடந்த புதன்கிழமை கொட்டாஞ்சேனை விகாரையில் நடைபெற்றது. அங்கு உரை நிகழ்த்துகையிலேயே பிரதிப் பொலீஸ்மா அதிபர் இதனைத் தெரிவித்தார்.

விரைவில் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களிலும் இத்தகைய பாதுகாப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு உயிர்கள் மற்றும் வேலைத்தளங்கள் அனைத்துக்கும் மேலாக இந்நாட்டினதும் பாதுகாப்பை உறுதி செய்ய பொதுமக்களின் உதவி பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-க)

# நாளைய கலந்துரையாடலில் ஜனாதிபதியும் ரணிலும் இல்லை

கொழும்பு,ஜூலை16

தற்சமயம் முன்வைக்கப்பட்டுள்ள புதிய - பிந்திய - யோசனைகள் குறித்துத் தமிழ்க்கட்சிகள் அதிருப்தி வெளியிட்டுள்ள நிலையில்-

நாளை இடம்பெறவிருக்கும் அரசு - ஐ.தே.க. சந்திப்பில் ஜனாதிபதியோ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவோ கலந்து கொள்ளமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு சார்பில் நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும், ஐ.தே.க. சார்பில் டிரோன் பெர்னாண்டோவும் மட்டுமே சந்திக்கவிருக்கின்றனர்.

தமிழ்க்கட்சிகள் அதிருப்தி வெளியிட்டுள்ள காணி அதிகாரம், நாட்டின் ஆட்சிமுறை, வடக்கு - கிழக்கு இணைப்பு ஆகிய மூன்று விடயங்கள் குறித்தே இன்றைய கலந்துரையாடலில் ஆராயப்படவிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-3)

# நல்லூர் உற்சவ ஏற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடல்

அடுத்தமாதம் நடைபெறவுள்ள நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின்போது வழமைபோன்று 'பாஸ்' வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆலய உற்சவம் தொடர்பான கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் யாழ். மாநகரசபையின் பதில் ஆணையாளர் சி.மா.பொன்னம்பலம் தலைமையில் அவரது பணிமனையில் நடைபெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் உற்சவ காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டதுடன் அவற்றை நடைமுறைப்படுத்துவது பற்றியும் தீர்மானிக்கப்பட்டது. வீதித்தடைகளை ஆலயத்துக்கு அருகில் அமைப்பது என்றும் வியாபாரிகளுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்குவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் உற்சவ நாள்களில் அதிகாலை 4.30 மணி தொடக்கம் மாலை 7.30 மணிவரையும் மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மின்சார சபையினர் இணக்கம் தெரிவித்தனர். மீண்டும் மேலதிக விடயங்கள் பற்றி கலந்துரையாடுவதற்கான கூட்டம் ஒன்று இம்மாதம் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அரச, அரச 'சார்பற்ற மற்றும் தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ஐ-10)

## மட்டக்களப்பில் இருவர் பலி

மட்டக்களப்பு சின்னக் கதிர்காமம் (துந்தாமலை) முருகன் ஆலய இரவு உற்சவத்தில் கலந்துகொண்டுவிட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பி வந்த இருவர் மீது இனந்தெரியாதோர் மறைந்திருந்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அந்த இருவரும் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் மட்டக்களப்பு மாவட்ட படுவான்கரைப் பகுதியில் உள்ள வாழக்காலை எனும் இடத்தில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தின்போது கேற்றாதீவைச் சேர்ந்த கிராம அலுவலர் சாள்ஸ் (வயது 25), இ.ஆறுமுகம் (வயது 45) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். (ஐ-க)

## தமிழ் இளைஞர் சென்னையில் கைது!

தகுந்த ஆவணங்கள் இன்றி சென்னை விமான நிலையத்திலிருந்து பிரசெல்ஸ் நகருக்குச் செல்ல முற்பட்ட இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

டொமினிக் சுரேஷ் (வயது25) என்பவரே கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டார்.

விமான நிலையத்தில் வைத்து சந்தேகத்தின் பேரில் குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இவர், தற்போது நீதிமன்றின் உத்தரவின் பேரில் பதினைந்து நாள் நீதிமன்றத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

பிரான்சில் வசிக்கும் இன்னொரு தமிழ் இளைஞர் இவரை வெளிநாட்டுக்கு அழைத்திருந்ததாகவும், அதற்காக கடந்த ஏழு வருடங்களாக இவர் சென்னையில் வசித்து வந்ததாகவும் - பிரஸ்தாப இளைஞனை விசாரணை செய்த பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-8)

## கொடிகாமத்துக்கு மின்சாரம்

இலங்கை மின்சார சபை ஊழியர்களின் கண்காணிப்பில் மீண்டும் கொடிகாமம், மிருசுவில் பகுதிகளுக்கு மின் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

கொடிகாமம் ரயில் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஜெனரேற்றரில் இருந்தே இந்த மின்சாரம் வழங்கப்படுகின்றது. இதனைக் கண்காணிக்க நான்கு ஊழியர்களை மின்சார சபை நியமனம் செய்துள்ளது. (ஐ-109)

## இடரிலும் தொடரும்.....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய யு.எஸ்.எய்ட் ஸ்தாபனத்தின் விதிமுறைகளில் இடமில்லை. எனவே எமது ஏனைய சேவைகள் தடையின்றி நடைபெற சமூகமட்டத்தில் இன்னும் பலர் எம்மத்தியில் வாழும் அங்கவீனர்களின் துயர் துடைக்க எமக்கு உதவ வேண்டுமென்பதே எம் பணிவான வேண்டுகோள்.

### யாழ். இந்து மாணவன் கொலை:

# வடமாகாண அதிபர்களின் சங்கம் பலத்த கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவன் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு வடமாகாண அதிபர்கள் சங்கம் பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கம் நேற்று வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த மாணவனின் கொலையை கல்விச் சமூகத்தின் சார்பில் வடமாகாண அதிபர்கள் சங்கம் மிக வன்மையாக கண்டிக்கிறது.

மிகுந்த துன்பங்களையும் துயரங்களையும் தனது நெஞ்சில் சுமந்தபடி தனது எதிர்காலக் கனவை நனவாக்கவும் தான் தங்கியுள்ள தனது குடும்ப நல்வாழ்வுக்காகவும் தன்னைப் போஷித்த சமுதாயத்துக்காகவும் உழைத்து நின்று கல்விக் கடமையைத் தவிர வேறு பக்கத்தில் தனது கவனத்தை சிதைக்காத யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் இழப்பு எமது இதயங்களை உலுப்பிவிட்டது.

அப்பாவி மாணவன் ஒருவனை கண்மூடித்தனமாகத் தாக்கி அவனது மரணத்துக்குக் காரணமாக இருந்தவர்கள் அவனைப் 'பயங்கரவாதிகள்' எனக் கூறமுனைந்ததும் - அவனைப் பெற்றவர்களே அதனை ஏற்றுக்கொண்டு ஒப்பமிடவேண்டி வற்புறுத்தி நின்றதையும் மனச்சாட்சியுள்ள எவராலும் சகித்துக்கொள்ள முடியாது.

மாணவ சமூகம் மட்டுமல்ல, முழுத் தமிழ் சமூகமுமே இந்தப் பயங்கர நிலைமையினால் பதற்றமடைந்துள்ளது.

இந்நிகழ்வுக்கு யார் உடனடிக் காரணமாக இருந்தார்களோ அவர்கள் இனங்காணப்பட்டு தண்டிக்கப்படும்வரை எமது மக்களின் பாதுகாப்புக்கு எவ்வித உறுதிப்பாட்டையும் நாம் ஏற்படுத்திக்கொள்ள முடியாது.

இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் நடக்காதபடி சம்பந்தப்பட்டவர்கள் பார்த்துக்கொள்வதுடன் அவர்களின் உறுதிமொழியும் காப்பாற்றப்பட வேண்டும்.

இதில் சம்பந்தப்பட்டோர் உடன் இனங்காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்பதனை அதிபர்கள் சங்கம் மிகவும் இறுக்கமாக வலியுறுத்துகின்றது.

இதயத்தை நெருடும் இத்துயரமான நிகழ்வுக்கு முகம்கொடுத்து தாங்கமுடியாத துயரத்தில் மூழ்கியுள்ள அமரர் சோ.சஞ்சீவனின் குடும்பத்தினரின் துன்பத்தில் நாமும் பங்குகொள்கின்றோம் - இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

# கலைப்பீட மாணவரும் கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை16

கடந்த 13ஆம் திகதி யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோ.சஞ்சீவன் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மாணவர் ஒன்றியமும் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விவரம் வருமாறு:-

நேற்றுமுன்தினம் ஊரடங்கு அல்லாத மாலை வேளையில் யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோ.சஞ்சீவன் கொக்குவில் பகுதியில் வைத்து சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். ஓர் அப்பாவி மாணவன் மிகவும் மிலேச்சத்தனமாக தாக்கப்பட்டுப் பின் படுகொலை செய்யப்பட்டமையினை பல்கலைக் கழக மாணவர் சமூகம் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன் சம்பந்தப்பட்ட கொலையாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட தரப்பினை வேண்டுகின்றது.

சமாதானத்தினையும் நல்வாழ்வினையும் ஏற்படுத்திக் கொடுக்கப் போவதாகக் கூறி யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்த அரசு குடாநாட்டில் செய்து வருகின்ற படுகொலைகள், சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள், மனித உரிமை மீறல்கள் அப்பாவிப் பொதுமக்களை மிக மோசமாக பாதித்து வருகின்றன. மேற்படி வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் வேண்டுகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 15ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சங்கானை

513/138348/A, 513/138348/B,
513/139591/A, 513/141285/A,
513/143835/A, 513/143835/B,
513/143870/A, 513/143876/A,
513/143916/A, 513/143916/B,
513/143916/C, 513/144004/A,
513/144004/B, 513/144004/C,
513/144041/A, 513/146271/A,
513/146271/B, 513/146271/C,
513/146285/A, 513/146307/A,
513/146307/B, 513/146341/A,
513/146341/B, 513/146342/A,
513/146353/A, 513/146398/A,
513/146416/A, 513/146419/A,
513/146419/B, 513/146419/C,
513/146419/D, 513/146419/E,
513/146419/F, 513/146419/G,
513/146419/H, 513/146425/A,
513/152504/A, 513/152512/A,
513/152512/B, 513/152512/C,
513/152512/D, 513/152512/E,
513/152518/A, 513/152518/B,
513/152521/A, 513/153424/A,
513/153424/B.

### சாவகச்சேரி

513/144179/A, 513/144179/B,
513/144179/C.

### கோப்பாய்

511/145445/A, 511/145445/B.

### நல்லூர்

511/140911/A, 511/141168/A,
511/145507/A, 511/145508/A,
511/145558/A, 513/142117/A,
513/143889/A, 513/146287/A,
513/146305/A, 513/146305/B,
513/146377/A, 513/146448/A,
513/147273/A, 513/152561/A,
513/152561/B.

### சண்டிலிப்பாய்

513/128969/A, 513/142100/A,
513/144092/A, 513/144092/B,
513/144092/C, 513/144092/D.
513/144410/A, 513/146317/A,
513/146322/A, 513/146328/A,
513/146328/B, 513/146350/A,
513/146387/A, 513/146387/B,
513/146451/A, 513/146984/A,
513/146984/B, 513/146984/C,
513/147041/A, 513/148253/A,
513/148253/B, 513/148254/A,
513/148261/A, 513/148261/B,
513/148272/A, 513/152509/A,
513/152509/B, 513/152509/C,
513/152509/D, 513/152509/E,
513/152509/F, 513/152516/A,
513/152516/B, 513/152516/C,
513/152516/D, 513/152516/E,
513/152547/A, 513/152547/B,
513/152548/A, 513/152550/A.

### தெல்லிப்பழை

513/153422/A.

### உடுவில்

511/145278/A, 513/127456/A,
513/127456/B, 513/143792/A,
513/143792/B, 513/143792/C,
513/143792/D, 513/143850/A,
513/143850/B, 513/143878/A,
513/143892/A, 513/143990/A,
513/143990/B, 513/143990/C,
513/143990/D, 513/143991/A,
513/146278/A, 513/146299/A,
513/146319/A, 513/146329/A,
513/146329/B, 513/146329/C,
513/146329/D, 513/146329/E,
513/146334/A, 513/146348/A,
513/146352/A, 513/146352/B,
513/146457/A.

வடக்கு - கிழக்கில் கட்சிகளிடம்

# ஆயுதங்களைக் களைந்தாலேயே தேர்தல் நியாயமாக நடக்கும்!

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை16

"ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ள கட்சிகளின் ஆயுதங்கள் உடனடியாகக் களையப்பட வேண்டும். அப்போதுதான் வடக்கு - கிழக்கில் ஓரளவுக்கேனும் நியாயமான தேர்தல்களை நடத்தமுடியும்"

- இப்படிக் கூறியிருக்கின்றார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்த சங்கரி.

"நாம் வடக்கு - கிழக்கில் சகல இடங்களிலும் போட்டியிடுவோம். எனினும் ஆயுதம் தாங்கிய தமிழ்க் கட்சிகளின் அச்சுறுத்தல்களை நாம் எதிர்நோக்க நேரிடும். எனவே ஓரளவுக்கேனும் நியாயமான தேர்தல்கள் நடத்தப்படுமானால் அக்கட்சிகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும்.

அடுத்த வாரம் ஜனாதிபதியுடன் பேசும்போது இதுபோன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்படும்.

- இவ்வாறு அவர் மேலும் கூறியுள்ளார். (உ-164)

# சிறுமி மீது பாலியல் வல்லுறவு 2 சிப்பாய்கள் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம்,ஜூலை16

பதினாறு வயதுச் சிறுமியைப் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தினர் என்ற குற்றத்தின் பேரில் இரு இராணுவச்சிப்பாய்கள் இராணுவப் பொலீஸாரால் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

பருத்தித்துறை மாலுசந்தி இராணுவ முகாமைச் சேர்ந்த கே.எஸ். எஸ்.பெரேரா, ஏ.எஸ்.கன்னங்கரா ஆகிய இரு சிப்பாய்களே இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட - மந்திகையைச் சேர்ந்த - சிறுமி அப்பகுதி ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கலாம் எனச்செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-8)

# 80வயது மூதாட்டி மீது பாலியல் வல்லுறவு!

நெல்லியடி,ஜூலை16

அல்வாய் குளங்கரைப்பகுதியில் விதவைப் பெண்ணான 80 வயது மூதாட்டி இளைஞர் ஒருவரினால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

வரணி அம்மா கடையடியிலிருந்து இடம்பெயர்ந்து அல்வாயில் தங்கியிருந்த திருமதி கிட்டினன் இலட்சுமி என்பவரே இவ்வாறு பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டவராவார்.

கடந்த திங்கட்கிழமை நெல்லியடிக்கு பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறச்சென்ற இவர் அல்வாய் நோக்கித் திரும்பும் வழியில் சைக்கிளில் வந்த 35 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவர் மூதாட்டியை வழிமறித்து அல்வாயிலுள்ள அவரது மகனின் வீட்டில் இறக்கி விடுவதாகக் கூறி சைக்கிளில் ஏற்றிச் சென்றாராம்.

மூதாட்டியை ஏமாற்றி சைக்கிளில் ஏற்றிய இளைஞன் அவரை குளங்கரைப் பகுதியிலுள்ள பற்றைக் காட்டுக்குள் பலாத்காரமாக இழுத்துச்சென்று பாலியல் வல்லுறவு புரிந்து விட்டுத் தப்பியோடிவிட்டார்.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மூதாட்டி மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை - நெல்லியடிப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-5-10-109)

## ஆள் சேர்ப்பு

பொலீஸ் அதிரடிப்படைப் பிரிவுக்கு ஆள்களைச் சேர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொலீஸ் அதிரடிப்படையில் சேர்வதற்கு 6 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-5)

## படையினர் 8ஆயிரம் பேர் இதுவரை கைது

கொழும்பு,ஜூலை16

இராணுவம் மற்றும் பொலீஸ் துறையிலிருந்து தப்பிச்சென்றவர்களைக் கண்டுபிடிக்க நாடு முழுவதும் தேடுதல் நடத்தப்பட்டு வருகிறது.

இத்தேடுதல்களின் போது இதுவரை 8 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொலீஸ் மற்றும் இராணுவச் சேவையிலிருந்து தப்பிச்சென்றுள்ள 20 ஆயிரம் பேரையும் கைது செய்வதற்கு கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (ஐ-5)

# நகை திருடிய குற்றச்சாட்டு 2 சிப்பாய்கள் நீதிமன்றில்!

நெல்லியடி,ஜூலை16

தென்மராட்சிப் பிரதேசத்தில் யுத்த சூழ்நிலை நிலவிய காலத்தில் மக்கள் இடம்பெயர்ந்த வீடுகளில் இருந்து தங்க நகைகளையும், பவுண் கட்டிகளையும் (பிஸ்கட்) திருடியதாகக் கூறப்படும் இரு இராணுவச் சிப்பாய்கள் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் அண்மையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வரணி, மந்துவில் பகுதிகளில் கடமையாற்றிவந்த குறித்த இரு சிப்பாய்களும் சங்கிலி, காப்பு, மோதிரம், பவுண் பிஸ்கட் போன்றவைகளை வீடுகளில் இருந்து சூறையாடியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இரு சிப்பாய்களும் கடந்த வெள்ளிவர்ரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு அதன் பின்னர் தனித்தனியே 10 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் 15 ஆயிரம் ரூபா பெறுமதியில் இருவரைப் பிணையாளிகளாகக் கொண்ட ஆள் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த இரு சிப்பாய்களும் மந்துவில், வரணி ஆகிய பிரதேசங்களில் நடமாடவோ அன்றி சேவையாற்றவோ கூடாது என்று சாவகச்சேரி மாவட்ட நீதிவான் பணித்துள்ளார். (உ-109)

## தலையாழிப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏதேனும் நேர்ந்துமிருக்கலாம் என்று அவர்களின் உறவினர்கள் அஞ்சுகின்றார்கள்.

இது குறித்து அவர்கள் வலிகாமம் மேற்குப் பிரதேசசபைத் தலைவா என்.திரிலோகநாதனுக்கு முறைப்பாடு செய்துள்ளனர். சம்பந்தப்பட்ட இருவரையும் தேடிக் கண்டுபிடிப்பதற்கு உதவுமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளதாக ஒரு தகவல் தெரிவித்தது. (உ-15)

## அரசு - புலிகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியில் கூறப்பட்டுள்ளது.

பூர்வாங்கப் பேச்சுக்களின் போது பேச்சுக்கான கால அட்டவணையை வரையறுத்தல் உட்பட பல அடிப்படை விடயங்கள் குறித்து தீர்மானிக்கப்படும் என்று தெரியவருவதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (உ-164)

## யாழ்.வாக்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை வழங்கப்படவில்லை.

மாறாக வாக்களிக்க புதிதாகத் தகுதி பெற்றவர்களின் பட்டியல்கள் இணைக்கப்பட்டும் இறந்தவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுமே புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டதாகவும் அரசாங்க அதிபர் மேலும் கூறியிருக்கின்றார். (ஐ-4)

## அரிதான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

123 வருடங்களுக்குப் பின்னரே மீண்டும் இதுபோன்ற அரிதான - நீண்ட நேரங்களுக்குக் காட்சியளிக்கும் - சந்திரகிரகணம் தோன்றும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இலங்கை நேர்ப்படி சூரிய அ.. தமனத்துக்கு முன்னரே ஆரம்பமாகும் சந்திரகிரகணம் இன்று இரவு 8.49 மணிக்கு முடிவடையும்.

இதை நேரடியாகப் பார்ப்பதன் மூலம் கண்ணுக்குப் பாதிப்பு ஏதும் ஏற்படாது என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (ஐ-4)

தங்கச் சங்கிலி அறுப்பு:

# இராணுவச் சிப்பாய் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்

நெல்லியடி,ஜூலை16

இடம்பெயர்ந்த பெண்ணின் கழுத்திலிருந்து தங்கச் சங்கிலியை அறுத்ததாகக் கூறப்படும் மிருசுவில் இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் நீதிமன்றில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் அடையாளம் காணப்பட்டார்.

கெற்பெலியிலிருந்து இடம்பெயர்ந்து கொடிகாமத்தில் தற்காலிகமாக வசித்து வந்த ஒரு பெண்மணியின் கழுத்திலிருந்து ஒரு பவுண் தங்கச்சங்கிலியை அறுத்து பறிகொடுத்த விடயம் தொடர்பாக கொடிகாமம் பொலீஸாரினால் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக குறித்த இராணுவச் சிப்பாய் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் கடந்த வியாழனன்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் முறைப்பாட்டாளரினால் அடையாளம் காண்பிக்கப்பட்டதை அடுத்து சந்தேகநபரான இராணுவச் சிப்பாயை 10 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் தலா 15 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையிலும் செல்லுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபரான குறித்த இராணுவச் சிப்பாய் உசன், மிருசுவில், கொடிகாமம், எழுதுமட்டுவாழ் பகுதிகளில் நடமாடுவதோ அன்றி சேவையாற்றுவதோ நீதிமன்றினால் தடை செய்யப்பட்ட நிலையிலேயே பிணையில் விடப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நீதிமன்ற வழக்குகள் தற்போது தற்காலிகமாக பருத்தித்துறை நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

## இ.தொ.கா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் ஆகியன இது தொடர்பாக நேற்று கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டன. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்தத் தீர்வுத்திட்டத்திலுள்ள சில அம்சங்கள் தமிழர்களின் அபிலாசைகளுக்கு முரணானவையாக உள்ளன.

★ வடக்கு - கிழக்கு மாகாணத்தை இரண்டு அதிகார பரவலாக்கல் அலகுகளாகப் பிரிப்பதற்கான ஏற்பாடு.

★ பிராந்திய நிர்வாகங்களில் மத்திய அரசு தலையிடுவதற்கான ஏற்பாடு.

★ காணி அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளமை -

★ பல மதங்களைக் கொண்ட இலங்கையில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கியுள்ளமை -

★ பிரஜாவுரிமையற்றிருக்கும் மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்க ஏற்கனவே இருந்த ஏற்பாட்டை நீக்கியுள்ளமை.

★ திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் தொடர்பில் சரியான நிவாரணம் வழங்காமை.

- இவைபோன்ற விடயங்களால் இந்தத் தீர்வுத்திட்டத்தை எங்களால் ஏற்க முடியவில்லை.

**கோரிக்கைகள்**

● தமிழர் தாயகத்தை எந்த வகையிலும் பிரிக்கக்கூடாது -

● இலங்கைத் தீவை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் -

● திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்கள் தொடர்பாக நியாயமான தீர்வு தேவை -

● மத்திய அரசுக்கான சில அத்தியாவசியமான அதிகாரங்கள் தவிர ஏனைய அனைத்து அதிகாரங்களும் பிராந்திய அரசாங்கங்களுக்கு வழங்கப்படவேண்டும் -

● பிராந்திய அரசுகள் சுயாட்சி அலகுகளாக அமையவேண்டும் -

● வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சிறுபான்மையினருக்காக அரசமைப்பு ரீதியாக மேற்கொள்ளப்படும் சகல ஏற்பாடுகளும் மலையகம் உட்பட இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் சகல தமிழர்களுக்கும் மேற்கொள்ளப்படவேண்டும் -

● வடக்கு-கிழக்குக்கு வெளியே - குறிப்பாக மலையகத் தமிழர்களுக்கு - அவர்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ற வகையில் பிரதிநிதித்துவம் சகல சபைகளிலும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும்.

● வடக்கு - கிழக்கில் இடம்பெறும் போரை உடனடியாக நிறுத்தி விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-4-5)

## பிரேத.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிள்களில் வந்த சீருடையினரால் சம்பந்தப்பட்ட மாணவனும் சிலரும் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டது குறித்தும் - பின்னர் அப்பகுதியில் சூட்டுச் சத்தம் கேட்டதாகவும் -

அயலவர்கள் சிலர் அந்தப் பிரதிநிதிகளிடம் கூறியதாகத் தெரியவந்தது.

மாணவனின் சடலத்தின் மீது பிரேத பரிசோதனை நடத்திய யாழ். சட்டவைத்திய அதிகாரி டாக்டர் ஸ்ரீ இராஜேஸ்வரன் தமது பிரேதபரிசோதனை அறிக்கையை இன்று யாழ்.நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதில் இம்மாணவனுக்கு இழைக்கப்பட்ட கொடூரம் குறித்த விடயங்கள் அம்பலமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம் மாணவனின் இறுதிக்கிரியைகள் நாளை நடைபெறவிருக்கின்றன.

மாணவனின் சடலம் எரிக்கப்படக்கூடாது; புதைக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடனேயே அது தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

நாளை இறுதியாத்திரையில் பாடசாலைச் சீருடையுடன் கலந்து கொள்ளும்படி மாணவர்களைக் கோரும் துண்டுப்பிரசுர அறிக்கை ஒன்று நேற்று மாலை கிடைத்தது.

இதற்கிடையில் -

கல்வி அதிகாரிகள், அதிபர் சங்கம், யாழ்.இந்துக்கல்லூரி நிர்வாகிகள் மற்றும் கல்லூரிச் சமூகத்தின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று இந்தப் படுகொலை குறித்து தமது ஆட்சேபத்தையும் கவலையையும் கண்டனத்தையும் தெரிவிப்பதற்காக உயர்மட்ட இராணுவ அதிகாரிகளை இன்று காலை சந்திக்க இருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது. (உ)


வெளிவந்துவிட்டது!

**பொருளியல்**

**நடைமுறை விடயங்கள் I, II**

**(2000 A/L பரீட்சை எதிர்பார்ப்புக்களுடன்)**

**ஆசிரியர் வே. கருணாகரன்** (76427)



## 3 ஆம் ஆண்டு நினைவுச் சுடர்

அன்னை மடியில்

19 - 09 - 1920



முருகன் கழலில்

19 - 07 - 1997

**வல்லிபுரம் வள்ளியம்மை**

திதி: ஆடிப்பூரணை (16-07-2000)

ஆண்டுகள் மூன்று கழிந்தன விரைந்து
ஆயினும் நினைவுகள் கரைந்திலவே!
மாண்டவர் மீண்டிலர் என் றறிந்தும்
மனம்நிதம் வேண்டுது நின்வரவை
எண்டிசைக் கொங்களைப் பேணி வளர்த்து
இட்டர்பல சுமந்து சிறப்புகள் நாம்
பூண்டிலங்கிடப் புவிதனில் வைத்தீர்
புண்ணியன் பூவடி நிலைத்திடுவீர்!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரி மற்றும் உறவினர்கள்.**

*"செந்திகா"*
*கண்ணகை அம்மன் கோயிலடி,*
*வட்டுக்கோட்டை (மேற்கு).*

(C/12233)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்(பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16-07-2000இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.